தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு

விலை ரூ.15 மலர் 22 | இதழ் 7 நவம்பர் 2020

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாத இதழ்

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி கலந்துரையாடல்

திருமதி. பா. ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப.,

மேலாண்மை இயக்குநர்,

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

முதன்மை செயல் அலுவலர்,

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

நவம்பர் 2020

அன்புள்ள சகோதரிகளே,

மகளிர் முன்னேற்றத்தில் முக்கிய பங்காற்றி வரும் நம் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநராக நான் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளேன் என்பதைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். ஒற்றுமைக்கும், அயராத உழைப்பிற்கும் எடுத்துக் காட்டாக விளங்கும் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களான உங்களுடன் எனது கருத்துக்களை இம்மாதம் முதல் பகிர்ந்து கொள்வது எனக்கு பேருவகையைத் தருகிறது. நான் எப்பொழுதும் உங்களில் ஒருவராக இருந்து செயல்பட விரும்புகிறேன்.

கொரோனா நோய்த் தொற்று பரவலுக்கு எதிராக நம் தமிழக அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளில் சுய உதவிக் குழுவினரான உங்களின் பங்களிப்பு மிகவும் சிறப்பாக இருந்து வருகிறது. இதற்காக அனைத்து தரப்பினரின் பாராட்டுகளையும் பெற்று வருகிறீர்கள். பல்வேறு மாவட்டங்களில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற கலந்தாலோசனைக் கூட்டங்களிலும் மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களை முன்வைத்திருக்கிறீர்கள். அதனடிப்படையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, மகளிர் முன்னேற்றத்திற்கான அளப்பரிய திட்டங்களை செயல்படுத்துவதற்கான முன்னேற்பாட்டு பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இது உங்களின் வெற்றிப் பயணத்தில் ஒரு மைல்கல்லாக அமையும்.

உங்களின் வெற்றிக்கு ஊக்கமளிக்கும் வகையில், தமிழக அரசு செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களை உங்களிடையே கொண்டு சேர்க்கும் உன்னத பணியை மேற்கொண்டு வரும் நம் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் உங்களோடு இணைந்து பயணிப்பதோடு, உங்களின் வளர்ச்சிக்கு என்றும் உறுதுணையாகவும் இருக்கும்.

எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்

திண்ணியர் ஆகப் பெறின்

என்ற திருக்குறள் வரிகளுக்கேற்ப இணைந்து செயலாற்றுவதில் ஏற்றமுடையவராக இருக்கும் நமது மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் எண்ணியதை எண்ணியவாறே அடைய வேண்டுமாயின், மகளிர் நலனில் அக்கறை கொண்டு தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வரும் திட்டங்களை முழுமையாக பயன்படுத்தி, மற்றவர்களுக்கும் அத்திட்டங்களைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி, அத்திட்டங்களின் பயன் அனைவரையும் சென்றடைய ஆவன செய்ய வேண்டும். நம் தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டுவரும் மகளிருக்கான அனைத்துத் திட்டங்களும் முழுமையடைவது உங்கள் கைகளில்தான் உள்ளது.

தற்போது பருவமழை காரணமாக, பல்வேறு நோய்கள் எளிதில் மக்களை தாக்கக்கூடும். இதிலிருந்து மக்களைக் காக்க, நம் தமிழக அரசு போர்க்கால அடிப்படையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அரசின் நடவடிக்கைகளுக்கு நாம் முழு ஒத்துழைப்பைத் தருவது மிகவும் அவசியம். நீங்கள் வசிக்கும் பகுதியில் மழைக்காலங்களில் ஏற்படும் இடர்பாடுகளை உடனடியாக நிவர்த்தி செய்யும் உன்னத பணியில் நீங்கள் ஈடுபட்டு மற்றவர்களையும் அதில் ஈடுபடச் செய்ய வேண்டும்.

இன்னமும் முற்றிலும் நீங்கி விடாத கொரோனா தொற்று பரவலும், அது எளிதில் பரவ ஏற்புடைய சூழ்நிலையை ஏற்படுத்தும் மழைக்காலமும் ஒருசேர வருவது ஓர் இடர்மிகு சவால் என்பதை மனதில் கொண்டு, இதனை அறிவுபூர்வமாக எதிர்கொண்டு ஆக்கப்பூர்வமான பணிகளில் நம் மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் அரசுடன் இணைந்து செயலாற்ற வேண்டும் என உங்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மீண்டும் சந்திப்போம்.

அன்புடன்,

மேலாண்மை இயக்குநர்

குறளும்-பொருளும்

வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வு

நீர்பூக்களின் அடிக்காம்பின் நீளம் நீரின் அளவே இருக்கும். அதுபோல மனிதரின் வாழ்க்கையின் உயர்வும் அவர் மனதில் கொண்டுள்ள ஊக்கத்தின் அளவே இருக்கும்.

உள்ளடக்கம்...

மகளிர் சுய உதவிக் குழுவினருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி கலந்துரையாடல் 05

உழைக்கும் மகளிருக்கு அம்மா இருசக்கர வாகன மானியம் வழங்குதல் 08

உழைக்கும் மகளிருக்கு மானியத்துடன் கூடிய அம்மா இருசக்கர வாகனங்கள் வழங்கும் நிகழ்ச்சி 10

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகள் ஆய்வு 13

ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் மற்றும் சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகள் ஆய்வு 14

திருவாரூரில் ஊரக வளர்ச்சித் துறையின் உன்னதி திட்டத்தின் கீழ் திறன்சார் தொழிற்பயிற்சி 21

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகள் ஆய்வு மற்றும் வங்கிக் கடனுதவிகள் வழங்குதல் 23

தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம் 28

முற்றக் கச்சேரி 32

இன்பாக்ஸ்

கவிதை, உடல் நலக் குறிப்புகள், சிறப்புக் கட்டுரைகள், சுய உதவிக் குழுக்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் போன்றவை குறித்த விபரங்களை சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தக்க புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளில் தகுதி வாய்ந்தவைகள் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். சுய உதவிக் குழுக்களின் வெற்றிக் கதைகள், குழுவின் செயல்பாடுகள் போன்றவற்றையும் புகைப்படத்துடன் அனுப்பினால், அவைகளும் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். முற்றம் இதழ் குறித்த தங்களின் விமர்சனங்களும், ஆலோசனைகளும் வரவேற்கப்படுகின்றன.

மின்னஞ்சல்
wdcmutram@yahoo.com
wdcmutram@gmail.com

protncdw1@gmail.com

முற்றம் வாசகர்களுக்கு ஓர் முக்கிய அறிவிப்பு

அச்சு மற்றும் வெளியீட்டு செலவினங்கள் அதிகரித்துள்ள காரணத்தினாலும், தற்போது மாறிவரும் சூழலுக்கேற்ப முற்றம் இதழை புதிய தொழில்நுட்ப வடிவில் மாற்றியமைக்கப்பட வேண்டியுள்ள காரணத்தினாலும் சுய உதவிக் குழு மகளிரின் உற்ற தோழியாக விளங்கி வரும் நமது முற்றம் இதழின் விற்பனை விலை மற்றும் ஆண்டு சந்தா கட்டணங்கள் ஜனவரி 2021 முதல் கீழ்கண்டவாறு மாற்றம் செய்யப்பட உள்ளது என்பதை அனைத்து முற்றம் வாசகர்களுக்கும் அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

முற்றம் இதழின் தனிப்பிரதி / சந்தா விபரம்	தற்போதைய விலை	ஜனவரி 2021 முதல் மாற்றம் செய்யப்படவுள்ள புதிய விலை	ஜனவரி 2021 முதல் முற்றம் வாசகர்களுக்கான சலுகை விலை
முற்றம் இதழின் தனிப்பிரதி	ரூ. 15	ரூ. 20	ரூ. 20
ஒரு ஆண்டு சந்தா	ரூ. 180	ரூ. 240	ரூ. 200 (தள்ளுபடி ரூ. 40)
இரண்டு ஆண்டு சந்தா	ரூ. 360	ரூ. 480	ரூ. 400 (தள்ளுபடி ரூ. 80)
மூன்று ஆண்டு சந்தா	ரூ. 540	ரூ. 720	ரூ. 600 (தள்ளுபடி ரூ. 120)

முற்றம் இதழின் வாசகர்கள் அளித்து வரும் தங்களின் ஆதரவினை இவ்விதழுக்குத் தொடர்ந்து வழங்கி உற்ற தோழியாய், உறுதுணையாய் என்றும் இருக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

– முற்றம் இதழ்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு முற்றம்

மலர் 22
இதழ் 7
நவம்பர் 2020
விலை ரூ.15

கௌரவ ஆசிரியர்கள்

திருமதி. பா. ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

முனைவர். ஜெ. யு. சந்திரகலா, இ.ஆ.ப.,
செயல் இயக்குநர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்,
தலைமை செயல் அலுவலர் (பொ),
தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம்

பதிப்பாளர் மற்றும் ஆசிரியர் — **எஸ். சின்னப்பன்,** செயலர், முற்றம்

ஆசிரியர் குழு

ஜா. சம்பத், கூடுதல் இயக்குநர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

ஜே. கணேஷ் கண்ணா, கூடுதல் இயக்குநர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

கே. சுமதி, கூடுதல் இயக்குநர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

எஸ். சாமுவேல் இன்பதுரை, கூடுதல் இயக்குநர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

கோ. லட்சுமிபதி, கூடுதல் இயக்குநர்,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

நிர்வாக ஆசிரியர் — **ரா. ஜீவா,** பொது மேலாளர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

நிதி நிர்வாகம் — **சு. இராமலெட்சுமி,** நிதி ஆலோசகர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

பொறுப்பாசிரியர் மற்றும் மேலாளர் — **கூ. பாபு,** செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

துணை ஆசிரியர் — **ஏ. கண்ணன்**

முதுநிலை கணக்காளர் — **சு. சசிகலா**

பிழை திருத்துபவர் — **எஸ். எஸ். ரவிச்சந்திரன்**

கணினி வடிவமைப்பு — **ஆ. சுரேஷ் பாபு**

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :
ஆசிரியர், 'முற்றம்', தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
அன்னை தெரசா மகளிர் வளாகம்,
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை, நுங்கம்பாக்கம்,
சென்னை – 600 034.
தொலைபேசி : 044 4211 9497, 044 2817 3412 / 3413
தொலைநகல் : 044 2817 3409

முற்றம் இதழ் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது.

ஆசிரியரிடமிருந்து...

சிறுவர் நலனை காப்போம்...

அன்புள்ள வாசகர்களுக்கு

பல மாதங்களுக்கு பிறகு கொரோனா தொற்று நோயின் அச்சத்திலிருந்து விடுபட்டது போன்ற உணர்வுடன் சகஜமாக நடமாட ஆரம்பித்து விட்டோம். இருப்பினும் அரசு தொடர்ந்து கொடுத்து வரும் எச்சரிக்கையை கருத்தில் கொண்டு கொரோனா தடுப்பு வழிகாட்டி முறையை பின்பற்ற பழகி கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

சிறுவர் தினத்தைக் கொண்டாடும் இந்த மாதத்தில் அவர்கள் நலனில் சிறப்பு கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகிறது. பிள்ளைகளின் நலன் கருதி கல்வி நிறுவனங்களை திறப்பதற்குக் கூட பலமுறை சிந்தித்து முடிவு எடுக்க வேண்டிய நிலை உருவாகி உள்ளது. இதற்காக பெற்றோர்களிடம் கருத்து கேட்பதற்கான அரசின் முயற்சி வரவேற்க கூடிய ஒன்றாகும்.

நவம்பர், டிசம்பர் மற்றும் ஜனவரி மாதங்களில் மழை மற்றும் பனி பொழிவு அதிக அளவில் இருப்பதால் குளிர்ச்சியான சூழல் நிலவும். இந்த குளிர்ந்த சூழலில் கொரோனா கிருமிகள் பரவ வாய்ப்புள்ளதாக வல்லுநர்கள் கூறுகின்றனர். இதனால்தான் கூடியவரை குளிர்சாதனத்தை பயன்படுத்த வேண்டாம் என அறிவுறுத்துகின்றனர்.

எனவே, கல்வி நிறுவனங்கள் திறக்கப்பட்டு பிள்ளைகளை அனுப்ப ஆரம்பித்தால் அவர்களுக்குப் பாதுகாப்பான முக கவசம், சூடான குடிநீர், பள்ளிகளிலும் வீடுகளிலும் இடைவெளியை கடைபிடிப்பதற்கான அறிவுரைகளை வழங்குவதற்கும், நோய் எதிர்ப்பு சக்தியை ஏற்படுத்தக் கூடிய சத்தான உணவுகளை கொடுப்பதற்கும் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. கல்வி நிறுவனங்களில் ஆசிரியர்கள் அரசு வழிகாட்டி நெறிமுறைகளை மாணவர்கள் சரியாக கடைபிடிப்பதை கண்காணிக்க வேண்டும். நிறுவனங்களை தூய்மையாக வைத்திருக்க வேண்டும். அவ்வப்போது மருத்துவர்களை வரவழைத்து மருத்துவ ஆலோசனைகளை வழங்குவது நல்லது.

எனவே, பிள்ளைகளை பாதுகாப்பது பெற்றோர்கள், கல்வி நிறுவனத்தின் நிர்வாகம் மற்றும் அரசு ஆகியோர்களின் கூட்டு பொறுப்பாகும். அனைத்து சிறுவர்களுக்கும் சிறுவர் தின நல்வாழ்த்துகளை முற்றம் தெரிவித்து கொள்கிறது.

இப்படிக்கு,

(எஸ்.சின்னப்பன்)
ஆசிரியர், முற்றம்

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி கலந்துரையாடல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 06.11.2020 அன்று திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். உடன், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் திரு. உடுமலை கே. ராதாகிருஷ்ணன், மாண்புமிகு சட்டப்பேரவை துணைத் தலைவர் திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், சட்டமன்ற உறுப்பினர்கள், திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் கே. விஜய கார்த்திகேயன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 06.11.2020 அன்று திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில், செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் அமைக்கப்பட்டுள்ள புகைப்படக் கண்காட்சியைப் பார்வையிட்டார்கள். உடன், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் திரு. உடுமலை கே. ராதாகிருஷ்ணன், மாண்புமிகு சட்டப்பேரவை துணைத் தலைவர் திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், சட்டமன்ற உறுப்பினர்கள், திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் கே. விஜய கார்த்திகேயன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் தலைமையில் 06.11.2020 அன்று நீலகிரி மாவட்டம், உதகமண்டலம் அரசு விருந்தினர் மாளிகையில், மாவட்ட மகளிர் சுய உதவிக் குழுவினருடன் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி, நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. ஜெ. இன்னசென்ட் திவ்யா, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 06.11.2020 அன்று நீலகிரி மாவட்டம், உதகமண்டலம் அரசு விருந்தினர் மாளிகையில் பல்வேறு துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள கண்காட்சி அரங்குகளைப் பார்வையிட்டார்கள். உடன், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி, சட்டமன்ற உறுப்பினர் திரு. ஏ. ராமு, நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. ஜெ. இன்னசென்ட் திவ்யா, இ.ஆ.ப., நீலகிரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவர் திரு. கப்பச்சி டி. வினோத் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 22.10.2020 அன்று புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பயனாளிகளுக்கு மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனங்களை வழங்கினார்கள். உடன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு. ஆர். காமராஜ், புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. பி. உமா மகேஸ்வரி, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் தலைமையில் 22.10.2020 அன்று புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில், மாவட்ட மகளிர் சுய உதவிக் குழுவினருடன் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு. ஆர். காமராஜ், மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர் திரு. ஜி. பாஸ்கரன், சட்டமன்ற உறுப்பினர்கள், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் தலைவர் திரு. பி. கே. வைரமுத்து, புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. பி. உமா மகேஸ்வரி, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

உழைக்கும் மகளிருக்கு அம்மா இருசக்கர வாகன மானியம் வழங்குதல்

கோயம்புத்தூர் மாவட்டம், தொண்டாமுத்தூர் வட்டாரத்திற்குட்பட்ட தேவராயபுரம், நரசீபுரம் மற்றும் வெள்ளிமலைபட்டினம் ஆகிய ஊராட்சிகளில் உழைக்கும் மகளிருக்கு அம்மா இருசக்கர வாகனத் திட்டத்தின் கீழ் 29 மகளிருக்கு தலா ரூ.25 ஆயிரம் வீதம் ரூ.7.25 இலட்சம் மதிப்பிலான மானிய தொகையினை மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி அவர்கள் 03.10.2020 அன்று வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் தேவராயபுரம் ஊராட்சியில் 9 மகளிருக்கு தலா ரூ.25 ஆயிரம் வீதம் ரூ.2.25 இலட்சம், நரசீபுரம் ஊராட்சியில் 12 மகளிருக்கு தலா ரூ.25 ஆயிரம் வீதம் ரூ.3 இலட்சம், வெள்ளிமலைபட்டினம் ஊராட்சியில் 8 மகளிருக்கு தலா ரூ.25 ஆயிரம் வீதம் ரூ. 2 இலட்சம் மதிப்பிலான மானியம் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. கு. இராசாமணி, இ.ஆ.ப., தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு.கு.செல்வராசு, உதவித் திட்ட அலுவலர்கள் மற்றும் அனைத்து துறை அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

நகர்ப்புற வாழ்வாதார மையம் திறப்பு விழா

கோயம்புத்தூர் மாவட்டத்தில் மகளிர் திட்டத்தின் வழிகாட்டுதலில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் கோவை மாநகராட்சி தெற்கு மண்டலம் சுகுணாபுரத்தில் நகர்ப்புற வாழ்வாதார மையத்தினை மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

இந்த நகர்ப்புற வாழ்வாதார மையத்தில் (CLC) பொது மக்கள் வருவாய் சான்றிதழ், ஜாதி சான்றிதழ், பிறப்பு / இறப்பு சான்றிதழ், வாரிசு சான்றிதழ், திருமண சான்றிதழ், விதவை சான்றிதழ், முதியோர் உதவித் தொகை மற்றும் பட்டா ஆகியவை பெற விண்ணப்பித்தல் போன்ற அனைத்து விதமான அரசு சான்றிதழ்கள் பெறுவதற்கும் இணையதளத்தில் விண்ணப்பிக்கும் சேவையை பெறலாம். மேலும்

மின் கட்டணம், தொலைபேசி கட்டணம், வீட்டு வரி, தண்ணீர் வரி போன்றவை செலுத்துதல், பேருந்து, ரயில் பயணச்சீட்டு பெறுதல் போன்ற இணையதள சேவைகளும் பெறலாம். மேலும் மாணவர்கள் போட்டி தேர்வுகளுக்கு இணையதளத்தில் விண்ணப்பித்தல் போன்ற சேவைகளையும் பெறலாம்.

இந்நிகழ்ச்சியில் கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. கு. இராசாமணி, இ.ஆ.ப., கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையாளர் திரு. பி. குமாரவேல் பாண்டியன், இ.ஆ.ப., கோயம்புத்தூர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. கு. செல்வராசு மற்றும் அனைத்து துறை உயர் அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

பருவமழையை முன்னிட்டு மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், நீர்நிலைகள் புனரமைப்பு, கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு, பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் வளர்ச்சிப் பணிகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு நகர்ப்புற மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் சார்பில் பருவமழையை முன்னிட்டு மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், நீர்நிலைகள் புனரமைப்பு, கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு, பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் வளர்ச்சிப் பணிகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் தலைமையில் 20.10.2020 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு கூடுதல் தலைமை செயலாளர் திரு.ஹர்மந்தர் சிங், இ.ஆ.ப., அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள், நகராட்சி நிர்வாக ஆணையாளர் திரு.கா.பாஸ்கரன், இ.ஆ.ப., அவர்கள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் டாக்டர் கே.எஸ்.பழனிச்சாமி, இ.ஆ.ப., அவர்கள், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் திரு.த.ந.ஹரிஹரன், இ.ஆ.ப., அவர்கள், பேரூராட்சிகள் இயக்குநர் திரு.எஸ்.பழனிச்சாமி, இ.ஆ.ப., அவர்கள், இணை ஆணையாளர் (சுகாதாரம்) திரு.பி.மதுசுதன் ரெட்டி, இ.ஆ.ப., அவர்கள், துணை ஆணையாளர் (வருவாய் (ம) நிதி) திரு.ஜெ.மேகநாத ரெட்டி, இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர் (பொ) முனைவர் ஜெ.யு.சந்திரகலா, இ.ஆ.ப., அவர்கள், ஊரக வளர்ச்சித் துறை கூடுதல் இயக்குநர்கள் உட்பட அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

திருவாரூர் மாவட்டம்

உழைக்கும் மகளிருக்கு மானியத்துடன் கூடிய அம்மா இருசக்கர வாகனங்கள் வழங்கும் நிகழ்ச்சி

தமிழ்நாட்டில் பெண்கள் தங்களது பணியிடங்களுக்கு செல்வதில் உள்ள சிரமங்களை உணர்ந்து, இந்திய திருநாட்டிலேயே முதல் முறையாக மகளிர் பணியிடங்களுக்கும், பிற வேலைகளுக்கும் எளிதில் செல்லும் வகையில் இருசக்கர வாகனங்கள் வழங்க 50 சதவீத மானியம் வழங்கும் அம்மா இருசக்கர வாகனத் திட்டம் என்ற ஒரு முன்னோடி திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் வாகனத்தின் மொத்த விலையில் 50 சதவீத மானியம் அல்லது ரூ.25,000/ இவற்றில் எது குறைவோ அத்தொகை வழங்கப்படும். மேலும், மாற்றுத்திறனாளி பயனாளிகளுக்கு மூன்று சக்கர வாகனம் வாங்க 50 சதவீத மான்யத்துடன் கூடுதலாக ரூ.6,250/ சேர்த்து வழங்கப்படுகிறது.

அதன் தொடர்ச்சியாக திருவாரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்தில் 16.10.2020 அன்று நடைபெற்ற

நிகழ்ச்சியில் மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு. ஆர் காமராஜ் அவர்கள் 500 பயனாளிகளுக்கு அம்மா இருசக்கர வாகன மானியமாக 1.25 கோடி ரூபாய் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் திருவாரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. த. ஆனந்த், இ.ஆ.ப., கூடுதல் ஆட்சியர் திரு. ஏ. கே. கமல் கிஷோர், இ.ஆ.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி. செ. பொன்னம்மாள், ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி. ஸ்ரீலேகா மற்றும் உதவித் திட்ட அலுவலர்கள், உட்பட பலர் கலந்து கொண்டனர்.

தூத்துக்குடி மாவட்டம்

உழைக்கும் மாற்றுத் திறனாளி மகளிருக்கு சிறப்பு அம்மா இருசக்கர வாகனங்கள் வழங்குதல்

தூத்துக்குடி மாவட்ட நிர்வாகம் மற்றும் மகளிர் திட்டம் சார்பில் நடைபெற்ற விழாவில் மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு. கடம்பூர் ராஜூ அவர்கள் கலந்து கொண்டு, மாற்றுத் திறனாளிகளின் வாழ்வாதாரத்தை ஊக்குவிக்கும் நோக்கத்துடன், 5 மாற்றுத் திறனாளிகளுக்கு அம்மா இருசக்கர வாகன திட்டத்தின் கீழ் மானியம் ரூ.1,56,250/ மற்றும் சமூக பொறுப்பு நிதியிலிருந்து ரூ.1,68,525/ என மொத்தம் ரூ.3,24,775/ மதிப்பிலான மூன்று சக்கர வாகனங்களை வழங்கினார். இவ்விழாவில் தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் திரு. சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., சட்டமன்ற உறுப்பினர் திரு. சண்முகநாதன், தூத்துக்குடி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி. பி. ஜே. ரேவதி, உதவி திட்ட அலுவலர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மலைவாழ் பழங்குடியின மக்களுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்கும் விழா

வேலூர் மாவட்டம்

வேலூர் மாவட்டம், அணைக்கட்டு ஊராட்சி ஒன்றியத்தில் பீஞ்சமந்தை ஜார்தான்கொல்லை மற்றும் பாலாம்பட்டு ஆகிய மூன்று ஊராட்சிகள் ஜவ்வாது மலை தொடர்ச்சியில் உள்ளன. இந்த கிராமங்களில் 2000க்கும் மேற்பட்ட பழங்குடியின குடும்பங்கள் வசித்து வருகின்றன. இவர்களுக்கு போதுமான வருமானம் மற்றும் வாழ்வாதார தொழில் செயல்பாடுகள் இல்லாததால் மிகவும் வறுமையான சூழலில் வாழ்ந்து வந்தனர்.

இவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கோடு அனைத்துத் துறைகளின் நலத்திட்ட உதவிகளையும் இப்பழங்குடியின மக்களுக்குப் பெற்றுத் தரும் வகையில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. அ. சண்முகசுந்தரம், இ.ஆ.ப., அவர்களின் தலைமையில் 21.10.2020 அன்று நடைபெற்ற விழாவில் மாண்புமிகு வணிகவரி மற்றும் பத்திர பதிவுத்துறை அமைச்சர் திரு. கே. சி. வீரமணி அவர்களும், வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. து. கதிர் ஆனந்த் அவர்களும், அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினர் திரு. நந்தகுமார் அவர்களும் கலந்து கொண்டு மலைவாழ் பழங்குடியின மக்களுக்கு சாதி சான்று, பட்டா, இலவச வீடுகள், வேளாண் இயந்திரங்கள், சுய உதவிக் குழுக்களுக்கு நலத் திட்ட உதவிகள், ஊட்டச்சத்து தோட்டம் அமைக்க காய்கனி விதைகள் மற்றும் இளைஞர்கள் தொழிற்திறன் பயிற்சிகள் பெறுவதற்கான ஆணைகள் போன்றவற்றை வழங்கினர்.

மேலும், அரசு பொது இசேவை மையம் ஒன்றும் துவக்கி வைக்கப்பட்டதுடன், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலம் ரூ. 22 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டது. இவ்விழாவில் வேலூர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. ஆ. ரா. சிவராமன், உதவித் திட்ட அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

சிவகங்கை மாவட்டம்

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல்

சிவகங்கை மாவட்டத்தில் நடைபெற்ற விழாவில், மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர் திரு. ஜி. பாஸ்கரன் அவர்கள் கலந்து கொண்டு, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் 2500 பயனாளிகள் பயன்பெறும் வகையில் 12 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு ரூ.1.30 கோடி மதிப்பிலான வேளாண்மை இயந்திரங்கள், 27 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.1.34 கோடி வங்கிக் கடன் இணைப்பு மற்றும் 26 பயனாளிகளுக்கு அம்மா இருசக்கர வாகன மானியத் தொகை ரூ.6.50 இலட்சம் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்வில் சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஜெ. ஜெயகாந்தன், இ.ஆ.ப., மற்றும் சிவகங்கை மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் இணை இயக்குநர் / திட்ட இயக்குநர் திரு. க. அருண்மணி, உதவித் திட்ட அலுவலர்கள், பல்வேறு அரசுத் துறை அலுவலர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

வணங்கி வரவேற்கிறோம்...

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநராக 28.10.2020 அன்று பொறுப்பேற்றுக் கொண்ட மதிப்பிற்குரிய திருமதி பா. ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப., அவர்களை, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் (TNCDW), தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் (TNSRLM), தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் (TNULM), தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம் (TNRTP), தீன்தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்ய யோஜனா (DDU-GKY), தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு முற்றம் (MUTRAM), தமிழ்நாடு மாநில அரசுசாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஆதார மையம் (TNVRC) மற்றும் தமிழ்நாடு மாநில வழங்கல் மற்றும் விற்பனை சங்கம் (TNSSMS) உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் சார்பாக வணங்கி வரவேற்கிறோம்.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகள் குறித்து கலந்தாய்வுக் கூட்டம்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் அன்னை தெரசா மகளிர் வளாக கூட்டரங்கில் 21.11.2020 அன்று, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி பா. ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வரும் அம்மா இருசக்கர வாகன மானியத் திட்டத்தின் முன்னேற்றம் குறித்தும், புரட்சித் தலைவி அம்மா காப்பீட்டுத் திட்டம் குறித்தும் அனைத்து மாவட்ட திட்ட இயக்குநர்கள் மற்றும் உதவித் திட்ட அலுவலர்களுடன் காணொலி காட்சி வாயிலாக கலந்தாய்வு செய்து, ஆலோசனை வழங்கினார்கள். இந்நிகழ்வில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கூடுதல் இயக்குநர் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

கடலூர் மாவட்டத்தில் ஊரக வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகள் ஆய்வு

கடலூர் மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகளை தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் (பொ) முனைவர் ஜெ. யு. சந்திரகலா, இ.ஆ.ப., அவர்கள் 17.10.2020 அன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

ஆய்வின் முதற்கட்டமாக, கடலூர் மாவட்டம் பெரிய காட்டுப்பாளையம் ஊராட்சியில் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பினரால் செயல்படுத்தப்பட்டு வரும் ஹாலோ பிளாக்ஸ், ரிங்க்ஸ் தயாரிப்பு கூடத்தை தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் (பொ) அவர்கள் பார்வையிட்டு, அதன் செயல்பாடுகள், விற்பனை வாய்ப்புகள் போன்றவற்றின் விபரங்களைக் கேட்டறிந்து, மேலும் சிறப்பாக செயல்பட ஆலோசனைகளை வழங்கினார்.

தொடர்ந்து பண்ருட்டி வட்டாரத்தில் செயல்படும் சுய உதவிக் குழுக்கள் மேற்கொண்டு வரும் பொம்மை உற்பத்தி, கிருமி நாசினி தயாரித்தல், மண்புழு உரம், நாற்றங்கால் உற்பத்தி, முந்திரி தரம் பிரித்தல், காய்கறி உற்பத்தி, பினாயில் உற்பத்தி, ஊதுவத்தி தயாரித்தல் போன்ற தொழில்களை பார்வையிட்ட மேலாண்மை இயக்குநர் (பொ) அவர்கள், அவற்றை மேம்படுத்துவதற்கு உரிய ஆலோசனைகளை வழங்கியதுடன், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் சமுதாய முதலீட்டு நிதியினை பெற்ற சுய உதவிக் குழுக்கள் முறையாக திரும்ப செலுத்தவும், அனைத்து சுய உதவிக் குழுக்களுக்கும் சமுதாய முதலீட்டு நிதி சுழற்சி முறையில் சென்றடைவதை உறுதி செய்யுமாறும் கூறினார்கள். மேலும் CST யின் செயல்பாடுகள், இ-மதியில் மேற்கொள்ளப்படும் பணிகள் ஆகியவற்றை கலந்துரையாடல் மூலம் கேட்டறிந்ததுடன், முற்றம் மாத இதழினை அனைத்து குழுக்களும் வாங்கிப் பயனடையுமாறும், பெரிய காட்டுப்பாளையம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கு விரைவில் பெருங்கடன் (Bulk Loan) பெற்றிடவும் ஆலோசனைகளை வழங்கினார்கள்.

இந்த ஆய்வின் போது, கடலூர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி பூ. காஞ்சனா மற்றும் உதவித் திட்ட அலுவலர்கள் உடன் இருந்தனர்.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகள் ஆய்வு

விழுப்புரம் மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்கள் தொடர்பான ஆய்வுக் கூட்டம் 17.10.2020 அன்று விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் நடைபெற்றது. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மேலாண்மை இயக்குநர் (பொ) முனைவர் ஜெ. யு. சந்திரகலா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்த ஆய்வுக் கூட்டத்திற்கு விழுப்புரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. அ. அண்ணாதுரை, இ.ஆ.ப., மற்றும் விழுப்புரம் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கூடுதல் இயக்குநர் / திட்ட இயக்குநர் திரு. வெ. மகேந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் விழுப்புரம் மாவட்டத்தில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் ஆகியவற்றின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களான அம்மா இருசக்கர வாகனத் திட்டம், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடனுதவி இணைப்பு வழங்குதல், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு விடுவிக்கப்படும் சமுதாய முதலீட்டு நிதி. ஆதார நிதி மற்றும் நலிவுற்றோருக்கான நிதி, நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டம். MKSP & SVEP மற்றும் இதர திட்டங்கள் தொடர்பாக விரிவாக ஆய்வு செய்யப்பட்டதுடன், உரிய ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.

இக்கூட்டத்தில் மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் திரு. சு. ஹரிஹரசுதன், இந்தியன் வங்கி ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனத்தின் இயக்குநர் திருமதி க. அனிதா, விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்ட மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் மற்றும் சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகள் ஆய்வு

விழுப்புரம் மாவட்டம்

கூடுதல் இயக்குநர் (திறன் வளர்ப்பு) திரு.ஜா.சம்பத் அவர்களின் தலைமையில், விழுப்புரம் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கூடுதல் இயக்குநர் / திட்ட இயக்குநர் திரு. வெ. மகேந்திரன், தலைமை அலுவலக பொது மேலாளர் திருமதி. சி. சந்தோஷினி சந்திரா, இணை இயக்குநர் (SM&IB) திருமதி. எஸ். செல்வராணி, முதுநிலை கணினி மேலாளர் திரு. காந்தி காளிதாஸ், மேலாளர் (SM&IB) திருமதி. சி. டி. மெய்யம்மை மற்றும் உதவித் திட்ட அலுவலர் (BD&ME) திரு. ரவி ஆகிய அலுவலர்கள், 16.10.2020 அன்று விழுப்புரம் மாவட்டம், மயிலம் ஒன்றியம், செண்டூர் மற்றும் கொல்லியங்குணம், வானூர் ஒன்றியம், ஒழிந்தியாம்பட்டு ஆகிய பகுதிகளில் செயல்படும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

கூட்டமைப்புகள் மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களின் செயல்பாடுகளைப் பார்வையிட்டதுடன், அவற்றின் பதிவேடுகளும் ஆய்வு செய்யப்பட்டு, அவற்றின் நிர்வாகிகளுடன் கலந்துரையாடலும் மேற்கொள்ளப்பட்டதுடன், சமுதாய முதலீட்டு நிதியின் மூலம் செயல்படுத்தப்படும் பூந்தோட்டம் தொழில் பார்வையிடப்பட்டது.

தொடர்ந்து விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் கூட்டரங்கில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்க திட்டங்கள் குறித்து களப்பகுதி வழிநடத்துநர்களுக்கு கலந்துரையாடல் மற்றும் அறிவுரைகள் வழங்கப்பட்டது.

காஞ்சிபுரம் மாவட்டம்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கூடுதல் இயக்குநர் (திறன் வளர்ப்பு) திரு. சம்பத் அவர்களின் தலைமையில், இணை இயக்குநர் (SM&IB) திருமதி. செல்வராணி, மேலாளர் (வளர்ச்சி பிரிவு) திருமதி. மெய்யம்மை, உதவி திட்ட அலுவலர் திரு. ரவி மற்றும் இளம் வல்லுநர் (SM&IB) திரு. அமிர் சுல்தான் ஆகியோர் 24.10.2020 அன்று காஞ்சிபுரம் மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகளை பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

இக்குழுவினர் குன்றத்தூர் ஒன்றியத்திற்குட்பட்ட மலையம்பாக்கம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் உள்ள அன்னை தெரசா மகளிர் சுய உதவிக் குழுவின் இயற்கை காய்கறி, கீரை உற்பத்தி அலகு, அங்காளம்மன் சுய உதவிக் குழுவின் ஆரி வேலைகள் (Arya Work) ஆகியவற்றைப் பார்வையிட்டு பல்வேறு ஆலோசனை வழங்கினர்.

அதனை தொடர்ந்து வாலாஜாபாத் ஒன்றியத்தில் உள்ள ஊத்துக்காடு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் மூலம் செயல்படுத்தப்படும் இயற்கை முறையிலான கீரை வளர்ப்பு, காஞ்சிபுரம் ஒன்றியத்தில் உள்ள அவளூர் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு, வள்ளியம்மன் மகளிர் சுய உதவிக் குழுவின் குழிதட்டு நாற்றங்கால் (நர்சரி) மற்றும் பாலமங்களம் மகளிர் சுய உதவிக் குழுவின் மண்புழு உரம் தயாரித்தல் ஆகியவற்றைப் பார்வையிட்டு அதன் உறுப்பினர்களுடன் கலந்தாய்வு செய்து ஆலோசனைகள் வழங்கப்பட்டது.

நிறைவாக காஞ்சிபுரம் மாவட்ட வட்டார மேலாளர்கள் மற்றும் வட்டார ஒருங்கிணைப்பாளர்களுடனான கலந்தாய்வுக் கூட்டத்தில் மேற்படி ஆய்வு செய்யப்பட்ட ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு, கிராம வறுமை ஒழிப்பு சங்கம் மற்றும் மகளிர் சுய உதவிக்குழுக்களின் வாழ்வாதார செயல்பாடுகளை மேம்படுத்த வேண்டிய நடவடிக்கைகள், பராமரிக்கப்பட வேண்டிய பதிவேடுகள் மற்றும் அறிக்கைகள் குறித்து ஆலோசனைகளை ஆய்வுக்குழுவினர் வழங்கினர்.

அம்மா காப்பீட்டு திட்டம் தொடர்பாக வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள குடும்பங்கள் குறித்த கணக்கெடுப்பு ஆய்வு

விழுப்புரம் மாவட்டம்

விழுப்புரம் மாவட்டம், திருவெண்ணெய்நல்லூர் வட்டாரம், அரசூர் மற்றும் ஆலங்குப்பம் ஊராட்சிகளில் அம்மா காப்பீட்டு திட்டம் தொடர்பாக வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள குடும்பங்கள் குறித்த கணக்கெடுப்பை தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கூடுதல் இயக்குநர் (திறன் வளர்ப்பு) திரு. ஜா. சம்பத் அவர்கள் 07.11.2020 அன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின் போது விழுப்ரம் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கூடுதல் இயக்குநர் / இணை இயக்குநர் (பொ) திரு. வி. மகேந்திரன், உதவித் திட்ட அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு, கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் ஆகியவற்றின் கணக்காளர்கள் மற்றும் சமுதாய மகளிர் சுய உதவிக் குழு பயிற்றுநர்கள் உடன் இருந்தனர்.

பெரம்பலூர் மாவட்டம்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கூடுதல் இயக்குநர் / முதன்மை இயக்கு அலுவலர் ((DDU-GKY) திரு. ஜே. கணேஷ் கண்ணா அவர்கள் தலைமையில், முதுநிலை ஆலோசகர் (நிதி உள்ளாக்கம்) திரு. திருநாவுக்கரசு, மாநில வாழ்வாதார திட்ட மேலாளர் திரு. சுந்தரேஸ்வரன் மற்றும் உதவித் திட்ட அலுவலர் திரு. முரளி (DDU-GKY) ஆகியோர் கொண்ட ஆய்வுக் குழுவினர் 09.10.2020 அன்று பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர், வேப்பந்தட்டை மற்றும் வேப்பூர் ஆகிய பகுதிகளில் செயல்படும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மற்றும் கிராம வறுமை ஒழிப்பு சங்கம் ஆகியவற்றினை நேரில் பார்வையிட்டு அவற்றின் செயல்பாடுகளை ஆய்வு செய்தனர்.

ஆய்வின் முதற்கட்டமாக தழுதாழை ஊராட்சியில் சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கும் மரச்சிற்ப உற்பத்தியாளர்கள் குழுவின் செயல்பாடுகள் ஆய்வு செய்யப்பட்டது. தொடர்ந்து வெங்கலம் ஊராட்சியில் வேளாண் இயந்திர வாடகை மையத்திற்காக ரூபாய் பத்து இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்பட்ட இயந்திரங்களின் பயன்பாடுகள் குறித்து ஆய்வு செய்யப்பட்டது. மேலும் இம்மையத்தினை முறையாக செயல்படுத்தி கூடுதல் வருவாய் ஈட்ட ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கு உரிய ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

விழுப்புரம் மாவட்டம்

விழுப்புரம் மாவட்டம், ஒலக்கூர் ஒன்றியம், ஓங்கூர் மற்றும் நொளம்பூர் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் ஆகியவற்றின் செயல்பாடுகளை கூடுதல் இயக்குநர் (பயிற்சி) திரு. ஜா. சம்பத் அவர்களின் தலைமையில், இணை இயக்குநர் (SM&IB) திருமதி. எஸ். செல்வராணி, மேலாளர் (SM&IB) திருமதி. சி. டி. மெய்யம்மை ஆகியோர் நேரில் பார்வையிட்டு, பதிவேடுகளை ஆய்வு செய்ததுடன், உறுப்பினர்களுடன் கலந்துரையாடினர். மேலும் சமுதாய முதலீட்டு நிதி, ஆதார நிதி, நலியுற்றோர் நிதி ஆய்வு மற்றும் பயனாளிகளை நேரில் சந்தித்து கலந்துரையாடியதுடன், சமுதாய முதலீட்டு நிதியின் மூலம் பெறப்பட்ட ஓங்கூர் கூட்டமைப்பின் மண்பாண்டம் தொழில் அலகு ஆய்வு குழுவினால் பார்வையிடப்பட்டது.

கோயம்புத்தூர் மற்றும் ஈரோடு ஆகிய மாவட்டங்களில் செயல்படும் கிராம வறுமை ஒழிப்பு சங்கம், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகளை தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கூடுதல் இயக்குநர் (கூடுகை மற்றும் கூட்டாண்மை) திருமதி. கே. சுமதி அவர்களின் தலைமையில், மாநில திட்ட மேலாளர் (DDU-GKY) திரு. ஜி. குமரன், TNVRC திட்ட ஒருங்கிணைப்பாளர் திருமதி. கா. காளத்தி, உதவித் திட்ட அலுவலர் (DDU-GKY), திரு. வி. சம்பத், MIS ஆலோசகர் திரு. அகியேசர் ஆகியோர் கொண்ட குழுவினர் 16.10.2020 மற்றும் 17.10.2020 ஆகிய தேதிகளில் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

இந்த ஆய்வின் போது கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள சூலூர் வட்டாரத்திற்குட்பட்ட ராசிபாளையம் ஊராட்சி, தொண்டாமுத்தூர் வட்டாரத்திற்குட்பட்ட போளுவாம்பட்டி மற்றும் மத்துவராயபுரம் ஊராட்சிகள், கிணத்துக்கடவு வட்டாரத்திற்குட்பட்ட மெட்டுவாவி மற்றும் நல்லட்டிபாளையம் ஊராட்சிகள் மற்றும் பொள்ளாச்சி (வடக்கு) வட்டாரத்திற்குட்பட்ட புரவிபாளையம் மற்றும் தேவம்பாடி ஊராட்சிகளில் செயல்படும் கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், உற்பத்தியாளர் குழுக்கள், ஊட்டச் சத்து தோட்டம், வேளாண் வாடகை இயந்திர மையம் ஆகியவற்றின் பதிவேடுகள் மற்றும் செயல்பாடுகள், மகளிர் சுய உதவிக் குழுக்கள் செய்து வரும் தொழில்கள் மற்றும் தலைமை அலுவலகத்திலிருந்து விடுவிக்கப்பட்ட சமுதாய முதலீட்டு நிதி, ஆதார நிதி, சமுதாய மகளிர் சுய உதவிக் குழு பயிற்றுநர்களுக்கான நிதி போன்றவை பயனாளிகளுக்கு சென்றடைதல் ஆகியவை குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் மற்றும் சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகள் ஆய்வு

தொடர்ந்து எஸ்.எஸ்.குளம் வட்டாரத்திற்குட்பட்ட வெள்ளமடை ஊராட்சி, பெரியநாயக்கன்பாளையம் வட்டாரத்திற்குட்பட்ட குருடம்பாளையம் மற்றும் அசோகபுரம் ஊராட்சிகள், ஆனைமலை வட்டாரத்திற்குட்பட்ட சுப்பேகவுண்டன்புதூர் ஊராட்சி, பொள்ளாச்சி (தெற்கு) வட்டாரத்திற்குட்பட்ட அம்பராம்பாளையம் ஊராட்சி, சுல்தான்பேட்டை வட்டாரத்திற்குட்பட்ட இடையர்பாளையம் ஊராட்சி ஆகிய இடங்களில் ஆய்வு குழுவினரால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

பின்னர் திட்டத்தின் முன்னேற்ற செயல்பாடுகள் குறித்து ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டது. இதில் கோயம்புத்தூர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. கு. செல்வராசு, மற்றும் உதவித் திட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

ஈரோடு மாவட்டம்

ஈரோடு மாவட்டத்தில் கோபிசெட்டிபாளையம் வட்டாரம். கோட்டுப்புள்ளாம்பாளையம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு, பெருந்தலையூர் ஒத்தத் தொழில் குழுவில் கால்மிதியடிகள் தயாரிக்கும் தறிகள், கால்மிதியடிகள், DDU GKY திட்டத்தின் மூலம் P.K.R Arts and Science College என்ற பயிற்சி நிறுவனத்தின் மூலம் நடைபெற்ற இளைஞர் தொழில்திறன் பயிற்சி மற்றும் பவானிசாகர் வட்டாரம், பனையம்பள்ளி ஊராட்சியில் அமைக்கப்பட்டுள்ள வேளாண் கருவிகள் வாடகை மையம் (Custom Hiring Centre) ஆகியவற்றை தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கூடுதல் இயக்குநர் (கூடுகை மற்றும் கூட்டாண்மை) திருமதி. கே.சுமதி மற்றும் ஆய்வுக்குழுவினர் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் மற்றும் சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகள் ஆய்வு

தூத்துக்குடி மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகளை தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கூடுதல் இயக்குநர் (வாழ்வாதாரம்) திரு. சாமுவேல் இன்பதுரை அவர்களின் தலைமையில் வேளாண்மை ஆலோசகர் திரு. ரகுராமன், மாநில அலுவலக உதவித்திட்ட அலுவலர் திரு. சுப்பிரமணியம், திட்ட ஒருங்கிணைப்பாளர் (TNVRC) திரு. ஸ்ரீனிவாசன், இளம் வல்லுநர் திரு. பிரவீன் ஆகியோர் அடங்கிய குழுவினர் 15.10.2020 அன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

இந்த ஆய்வில் தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் வட்டாரம், சிவகளை, அனியாபரநல்லூர், மறவன்மடம் மற்றும் குமாரகிரி ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், சுய உதவிக் குழுக்களின் பாக்கு மரத் தட்டு உற்பத்தி அலகு, மாற்றுத் திறனாளிகள் உணவகம், நாப்கின் தயாரிப்பு அலகு போன்றவை பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது. மேற்கண்ட ஊராட்சிகளில் CIF / VRF கடன் பெற்றவர்கள் விபரம், கடன் திருப்பம், பதிவேடுகள் பராமரித்தல், மேற்கொண்டு வரும் தொழில்கள், வாழ்க்கைத்தரம், E-mathi இணையதள பதிவேற்றம் போன்றவையும் ஆய்வு செய்யப்பட்டது. மேலும் இந்த ஆய்வின் போது மகளிர் சுய உதவிக் குழுவினரின் உற்பத்தி பொருட்களான மண்பாண்ட பொருட்கள், பனை ஓலை பொருட்கள், செயற்கை ஆபரணங்கள், இனிப்பு மற்றும் கார தின்பண்டங்கள், ஹேர் ஆயில் (மூலிகை தைலம்), துணிப்பை, ஸ்கிரீன் பிரிண்டிங் மற்றும் சணல்பை போன்றவை பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன.

கூடுதல் இயக்குநர் அவர்கள் அவற்றை நேரில் பார்வையிட்டு 'மதி' பெயரில் விற்பனை செய்ய விருப்பம் உள்ளவர்கள் விபரம் அளிக்குமாறு கூறினார். தொடர்ந்து கருங்குளம் வட்டார இயக்க மேலாண்மை அலுவலகத்தில் நடைபெற்ற சமூக சுய உதவிக் குழு பயிற்றுநர்கள், கிராம வறுமை ஒழிப்பு சங்கம் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு கணக்காளர்களிடம் கலந்துரையாடல் மேற்கொண்டு பேசி E-mathi Entry, CST, கணக்காளர்கள், கிராம வறுமை ஒழிப்பு சங்கம், ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்பு, மகளிர் சுய உதவிக் குழு ஆகியவற்றின் செயல்பாடுகளை ஆய்வு செய்தார்.

பின்னர் கயத்தார் வட்டாரம், தெற்கு மயிலோடை ஊராட்சியில் செயல்பட்டு வரும் வேளாண் வாடகை மையத்தின் உறுப்பினர்களை நேரில் சந்தித்து வாடகை மையத்தின் செயல்பாடுகள் குறித்து கேட்டறிந்தார். இந்த ஊராட்சியில் செயல்படும் ஆயத்த ஆடை உற்பத்தி செய்யும் மகளிர் தையலகம், ஊட்டச்சத்து தோட்டம் ஆகியவற்றை பார்வையிட்டு பயனாளிகளுக்கு ஊட்டச்சத்து தோட்டம் அமைப்பதற்கான விதைகளை வழங்கினார்.

இந்த ஆய்வின் போது தூத்துக்குடி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி. பி. ஜே. ரேவதி, உதவி திட்ட அலுவலர்கள், வட்டார இயக்க மேலாளர்கள், வட்டார இயக்க ஒருங்கிணைப்பாளர்கள், VPRC / PLF கணக்காளர்கள், சமூக சுய உதவிக் குழு பயிற்றுநர்கள் கலந்து கொண்டனர்.

திருவள்ளூர் மாவட்டம்

திருவள்ளூர் மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகளை, கூடுதல் இயக்குநர் (வாழ்வாதாரம்) திரு. எஸ். சாமுவேல் இன்பதுரை அவர்களின் தலைமையிலான குழுவினர் 23.10.2020 அன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர். இந்த ஆய்வில் கும்மிடிபூண்டி ஊராட்சி ஒன்றியம், போந்தவாக்கம் ஊராட்சியில் விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம் (MKSP), விவசாய கருவிகள் வங்கி, பஞ்சகாவ்யா உற்பத்தி, உற்பத்தியாளர் குழு, வேளாண் பொருட்கள் சந்தைப்படுத்துதல் ஆகிய செயல்பாடுகளை பார்வையிட்டார். மேலும் இது குறித்து ஆலோசகர், இளம் வல்லுநர்கள், மேலாளர் (DSMS), சமுதாய வளப் பயிற்றுநர்கள், வட்டார இயக்க மேலாளர், ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் TNRTP திட்ட அலுவலர்களுடன் கலந்தாலோசனை கூட்டமும் நடைபெற்றது.

வேலூர் மாவட்டம்

ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் மற்றும் சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகள் ஆய்வு

வேலூர் மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக / நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகளை மாநில தலைமை அலுவலகத்தின் பொது மேலாளர் திருமதி. சி. சந்தோஷினி சந்திரா, இணை இயக்குநர் (நிறுவன கட்டமைப்பு) திருமதி. செல்வராணி, நிதி ஆலோசகர் (நிதி உள்ளாக்கம்) திரு. திருநாவுக்கரசு மற்றும் அலுவலர்கள் அடங்கிய குழுவினர் 12.10.2020 அன்று ஆய்வு மேற்கொண்டனர்.

ஆய்வின் முதற்கட்டமாக தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் மூலம் மாவட்ட இயக்க மேலாண்மை அலகில் பராமரிக்கப்படும் பதிவேடுகள், கோப்புகள், செயல்முறை ஆணைகள் மற்றும் நிதி தொடர்பான அனைத்து கோப்புகள், பணியாளர்கள் குறித்த கோப்புகள் ஆகியவற்றை ஆய்வு மேற்கொண்டனர்.

தொடர்ந்து காட்பாடி ஊராட்சி ஒன்றியத்தில் மெட்டுகுளம் மற்றும் கண்டிப்பேடு, வேலூர் ஊராட்சி ஒன்றியத்தில் அன்பூண்டி ஊராட்சி மற்றும் கணியம்பாடி ஊராட்சி ஒன்றியத்தில் பாலாத்துவண்ணான் ஊராட்சி ஆகியவற்றில் செயல்படும் ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்புகள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் மற்றும் சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகளைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு பல்வேறு ஆலோசனைகளையும், அறிவுரைகளையும் வழங்கினர்.

விழுப்புரம் மாவட்டம்

விழுப்புரம் மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகளை மாநில தலைமை அலுவலகத்தின் பொது மேலாளர் திருமதி. சி.சந்தோஷினி சந்திரா, உதவித் திட்ட அலுவலர் (BD&ME) திரு. ரவி ஆகியோர் 16.10.20202 அன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

ஆய்வுக் குழுவினர், விக்கிரவாண்டி ஒன்றியம், மூங்கில்துறைபட்டு, கோலியனூர் ஒன்றியம் ஆகியவற்றில் செயல்படும், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் ஆகியவற்றின் செயல்பாடுகள், பதிவேடுகள் ஆகியவற்றை பார்வையிட்டு ஆய்வு செய்ததுடன், அவற்றின் உறுப்பினர்களுடன் கலந்துரையாடலும் மேற்கொண்டனர். பின்னர் மேற்கண்ட ஊராட்சிகளில் சமுதாய முதலீட்டு நிதி, ஆதார நிதி, நலியுற்றோர் நிதி ஆய்வு மற்றும் பயனாளிகளை நேரில் சந்தித்து கலந்துரையாடியதுடன், சமுதாய முதலீட்டு நிதியின் மூலம் பெறப்பட்ட தையல் தொழில் மற்றும் பொம்மை மற்றும் மண்பாண்டம் தொழில் பார்வையிடப்பட்டது.

திருவண்ணாமலை மாவட்டம்

மிஷன் அந்தியோதயா திட்டத்தின் கீழ் அனைத்து துறை சார்ந்த அலுவலர்களுக்கான ஆய்வுக் கூட்டம்

திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டாரங்களிலும் 2020-21 ஆம் ஆண்டிற்கான People Plan Campaign (Sabki Yojana Sabki Vikas) திட்டத்தின் கீழ் தகவல் சேகரிக்கும் பொருட்டு திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.க.சு.கந்தசாமி, இ.ஆ.ப., அவர்களின் தலைமையில் 23.10.2020 அன்று மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் அனைத்து துறை சார்ந்த அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டது. மேலும், வட்டார அளவில் 21.10.2020 மற்றும் 22.10.2020 அன்று தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து சமூக வளப் பயிற்றுநர்களுக்கும் பயிற்சி வழங்கப்பட்டது.

சேலம் மாவட்டம்

தமிழ்நாடு மாநில ஊரக / நகர்ப்புற வாழ்வாதார இயக்கங்களின் செயல்பாடுகள் பார்வையிடல்

சேலம் மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் ஆகியவற்றின் செயல்பாடுகளை 15.10.2020 அன்று கூடுதல் ஆட்சியர் (பயிற்சி) திரு. வீரபிரதாப்சிங், இ.ஆ.ப அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின் போது சேலம் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கூடுதல் இயக்குநர் / திட்ட இயக்குநர் திரு. நா. அருள்ஜோதி அரசன் அவர்கள் மற்றும் உதவித் திட்ட அலுவலர்கள் கூடுதல் ஆட்சியர் அவர்களிடம் வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகளை விளக்கிக் கூறினர்.

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் மாநில திட்ட மேலாளர் (SPM) திரு. கே. மூர்த்தி அவர்கள் உடனிருந்து தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகள் குறித்தும், பயிற்சி நிறுவனங்கள் வழங்கக் கூடிய பயிற்சிகள் குறித்தும் விளக்கமளித்தார். மேலும், சமுதாய அமைப்பாளர்களுடன் கலந்தாய்வு கூட்டம் நடத்தி திட்டத்தின் முன்னேற்றம் குறித்து கூடுதல் ஆட்சியர் கேட்டறிந்தார். அப்போது பாரதப் பிரதமரின் தெருவோர வியாபாரிகளின் சிறப்பு திட்டமான PM-SVANidhi திட்டத்தின் கீழ் பயனடைந்த பயனாளிகளை சந்தித்து அவர்களுடைய வாழ்வாதார வளர்ச்சி குறித்து கேட்டறிந்தார்.

இந்த ஆய்வின்போது உதவித் திட்ட அலுவலர்கள் திரு. ஏ. ஷாகுல் ஹமீது மற்றும் திரு.கே.முருகேசன் ஆகியோர் உடனிருந்தனர்.

திண்டுக்கல் மாவட்டம் ஊட்டச்சத்து தோட்டம் அமைத்தல்

திண்டுக்கல் மாவட்டத்தில் 2020-21ம் ஆண்டில் நிலக்கோட்டை, வடமதுரை, சாணார்பட்டி மற்றும் திண்டுக்கல் ஆகிய நான்கு வட்டாரங்களில் உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பினை உறுதி செய்வதற்கு தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் பண்ணை சார்ந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு ஊட்டச்சத்து தோட்டம் அமைக்க, திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. மு. விஜயலட்சுமி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் 20.10.2020 அன்று நடைபெற்ற ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில், திண்டுக்கல் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் மருத்துவர் சு. சுரேஷ், மாவட்ட வன அலுவலர் (சமூக காடுகள்), தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர், ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மற்றும் குழந்தைகள் நலத் திட்ட அலுவலர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிலக்கோட்டை, வடமதுரை, சாணார்பட்டி மற்றும் திண்டுக்கல் ஆகிய வட்டாரங்களில் ஊட்டச்சத்து குறைபாடு உள்ள மற்றும் சுய உதவிக் குழுவினைச் சேர்ந்த 5517 பயனாளிகள் கண்டறியப்பட்டுள்ளனர். அவர்களுக்கு திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஊட்டச்சத்து தோட்டம் அமைக்க காய்கறி விதைகள் மற்றும் பப்பாளி, எலுமிச்சை, கொய்யா போன்ற பழ மரக்கன்றுகளை வழங்கினார்.

தமிழ்நாடு தலைமைச் செயலகப் பிரிவு அலுவலர்களுக்கு தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்கள் குறித்து ஒரு நாள் பயிற்சி

தமிழ்நாடு தலைமைச் செயலகத்தில் பல்வேறு துறைகளில் பணிபுரியும் 20 பிரிவு அலுவலர்களுக்கு 21.10.2020 அன்று தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்கள் குறித்து ஒரு நாள் பயிற்சி வழங்கப்பட்டது.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கூட்டரங்கில் நடைபெற்ற இப்பயிற்சியில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம், அம்மா இருசக்கர வாகனத் திட்டம், தீன்தயாள் உபாத்யாய கிராமின் கௌசல்ய யோஜனா திட்டம், மகளிர் சுய உதவிக் குழுக்களின் வளர்ச்சி போன்ற விபரங்கள் படக்காட்சி மூலம் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன அலுவலர்களால் விளக்கப்பட்டது.

திருவாரூரில் ஊரக வளர்ச்சித் துறையின் உன்னதி திட்டத்தின் கீழ் திறன்சார் தொழிற்பயிற்சி

உன்னதி என்ற ஹிந்தி சொல்லின் அர்த்தம் "மேம்பாடு" என்பதாகும். மத்திய, மாநில அரசின் ஊரக வளர்ச்சித் துறையின் இந்த திட்டமானது மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்ட பணியாளர்களுக்கு ஊக்கத் தொகையுடன் கூடிய திறன் சார் தொழிற்பயிற்சி அளித்து அவர்களுடைய வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதேயாகும். திருவாரூரில் இந்தத் திட்டத்ினை தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மாவட்ட அலகும், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி மையமும் இணைந்து செயல்படுத்தி வருகின்றன.

திருவாரூர் மாவட்டத்தில் உள்ள 18-45 வயதிற்குட்பட்ட நூறு நாள் வேலைத்திட்ட பெண் பணியாளர்களில் தகுதியான 21 நபர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்கு எம்பிராய்டரி மற்றும் ஃபேப்ரிக் பெயிண்டிங் பயிற்சி கடந்த மார்ச் 4, 2020 அன்று ஆரம்பிக்கப்பட்டது. முற்றிலும் இலவசமாக 30 நாட்கள் எம்பிராய்டரி பயிற்சியில் பயிற்சியாளர்களுக்கு திருமண பிளவுஸ்களுக்கான ஆரி வேலைப்பாடுகள், ஹேண்ட் எம்பிராய்டரி துணிகளில் வண்ணம் தீட்டுதல், தொழில் முனைவோர் ஊக்குவிப்பு மற்றும் தொழில் நிர்வாகம் சார்ந்த பாடங்கள் கற்றுத் தரப்பட்டது. பயிற்சியாளர்கள் தவறாமல் பயிற்சியில் கலந்து கொண்டது மட்டுமல்லாமல், மிக ஆர்வமுடன் பயிற்சியைக் கற்றுக் கொண்டனர். பயிற்சி காலங்களில் பயிற்சியாளர்களுக்கு இலவசமாக காலை உணவு, மதிய உணவு, இரு வேளை தேநீர் மற்றும் பிஸ்கட் போன்றவை வழங்கப்பட்டது.

ஆனால் பயிற்சியானது 12 நாட்கள் மட்டுமே நடந்திருந்த சூழலில் கொரோனா ஊரடங்கு காரணமாக மார்ச் மூன்றாம் வாரத்தில் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. பின்னர் செப்டம்பர் 25, 2020லிருந்து மாநில அரசினுடைய வழிகாட்டு நெறிமுறைகளின்படி பயிற்சியானது மீண்டும் தொடங்கப்பட்டது. பயிற்சியாளர்கள் அதே ஆர்வத்தோடு பயிற்சியில் கலந்து கொண்டனர். இறுதியாக அக்டோபர் 16, 2020 அன்று நடந்த மூன்றாம் தரப்பு மதிப்பீட்டுத் தேர்வில் பயிற்சியாளர்கள் அனைவரும் (17 நபர்கள்) தேர்ச்சி அடைந்துள்ளனர்.

மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற பயிற்சி நிறைவு விழாவில் திருவாரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. டி. ஆனந்த், இ.ஆ.ப., அவர்கள் பயிற்சியாளர்கள் அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கினார். மேலும் பயிற்சியாளர்கள் சுய தொழில் தொடங்குவதற்காக கடனுதவியும், பயிற்சிக்கான ஊக்கத் தொகையும் வழங்கப்படும் என மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

பயிற்சியாளர்களின் பயிற்சி அனுபவங்களைக் கேட்டறிந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், பயிற்சி சிறப்பாக நடைபெற உறுதுணையாக இருந்த திருவாரூர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குனர் திருமதி.ஸ்ரீலேகா தமிழ்செல்வன் மற்றும் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி மைய இயக்குனர் திருமதி. கீதா தினேஷ் ஆகியோரை பாராட்டினார்.

திருவாரூர் மாவட்டம்

கோவிட் – 19 தொடர்பான விழிப்புணர்வு ரங்கோலி

திருவாரூர் மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள மகளிர் சுய உதவிக் குழுக்களின் மூலம் திருவாரூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் அறிவுரையின்படி, கோவிட் 19 தொடர்பாக அனைத்து நகர்ப்புறம் மற்றும் ஊரக பகுதிகள், பேருந்து நிலையங்கள், பொது மக்கள் அதிகம் கூடும் இடங்களில் ரங்கோலி வரைந்து பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

இவ்விழிப்புணர்வில் கோவிட் 19 தொற்றிலிருந்து தற்காத்து கொள்ளும் முறைகள், மழை காலங்கள் மற்றும் பண்டிகை காலங்களில் கூடுதல் கவனத்துடனும் விழிப்புடனும் இருத்தல், கட்டாயம் முகக் கவசம் அணிதல் மற்றும் சமூக இடைவெளியை பின்பற்றுதல் உள்ளிட்ட வாசகங்கள் இடம் பெற்றிருந்தன.

திருவள்ளூர் மாவட்டம்

ஊட்டச்சத்து தோட்டம் (Nutri garden) - TOT - பயிற்சி

திருவள்ளூர் மாவட்டத்தில், AAP 2020-21 ஆண்டு திட்டத்தின் கீழ் திருத்தணி, இ.ராகி.பேட்டை, பூண்டி மற்றும் எல்லாபுரம் ஆகிய 4 வட்டாரங்களில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 15.10.2020 அன்று KVK திருவூர் வேளாண் அறிவியல் நிலையத்தில் (MSSRF) சுவாமிநாதன் அறக்கட்டளையின் உதவியுடன், ஊட்டச்சத்து தாவரத் தோட்டம் (Nutri garden) உருவாக்குதல் குறித்து பயிற்சி முகாம் நடைபெற்றது.

இம்முகாமிற்கு வேளாண் அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் திருமதி. சாந்தி, சுவாமிநாதன் அறக்கட்டளை திட்ட இயக்குநர் திரு. ஹரிஹரன், தோட்டக்கலை உதவிப் பேராசிரியர் திருமதி. புனிதா, DSMS மேலாளர் திரு. சந்திரசேகர், இளம் வல்லுநர் திருமதி. ஜூலியட் ஆகியோர் பயிற்சியில் கலந்து கொண்டனர். இதில் பங்கு கொண்ட 45 முதன்மை சமுதாய வள பயிற்றுநர்களுக்கு வேளாண் அறிவியல் நிலையத்தில் உள்ள ஊட்டச்சத்து தோட்டத்தில் செயல் விளக்கம் அளிக்கப்பட்டு பயிற்சி கையேடுகளும் வழங்கப்பட்டன.

பொடுகு தொல்லையை முற்றிலும் போக்க உதவும் அற்புத குறிப்புகள்

பசலை கீரையை அரைத்துத் தலையில் தேய்த்துக் குளிக்கலாம். அருகம்புல் சாறு எடுத்துத் தேங்காய் எண்ணெய்யுடன் சேர்த்து நன்றாகக் காய்ச்சிப் பின்பு ஆற வைத்துத் தலையில் தேய்க்கலாம்.

காய்ந்த வேப்பம்பூ 50 கிராம் எடுத்து, 100 மி.லி. தேங்காய் எண்ணெயில் போட்டு நன்கு காய்ச்ச வேண்டும். இளஞ்சூடு பதத்துக்கு ஆறியதும், வேப்பம்பூவுடன் சேர்த்து எண்ணெய்யைத் தலையில் தேய்த்து அரை மணி நேரத்துக்குப் பிறகு குளிக்க வேண்டும்.

சின்ன வெங்காயத்தைத் தோலுரித்துச் சுத்தம் செய்து அம்மியில் வைத்து மை போல அரைத்து, அதை எடுத்துத் தலைக்குத் தேய்த்துக் குளித்து வந்தால், தலைச் சூடு குறைந்து குளிர்ச்சியடையும்.

தேங்காய் எண்ணெயில் வெந்தயத்தைச் சேர்த்துக் காய்ச்சித் தலையில் தேய்த்துக் குளிக்கலாம். பாசிப்பயறு மாவு, தயிர் கலந்து தலையில் ஊற வைத்துப் பின்னர் குளிக்க வேண்டும்.

கற்றாழைச் சாற்றைத் தலையின் மேல் பகுதியில் நன்குபடும்படி தேய்த்து ஊற வைத்து, சிறிது நேரம் கழித்துக் குளித்தால் பொடுகு தொல்லை நீங்கும்.

தலையில் சிறிதளவு தயிர் தேய்த்துச் சில நிமிடங்கள் கழித்துச் சீயக்காய் தேய்த்துக் குளிக்கலாம். வேப்பிலைக் கொழுந்து, துளசி ஆகியவற்றை மையாக அரைத்துத் தலையில் தேய்த்துச் சிறிது நேரம் கழித்துக் குளிக்க வேண்டும்.

நெல்லிக்காய் தூள், வெந்தயப் பொடி, தயிர், கடலை மாவு கலந்து தலையில் தேய்த்து, சிறிது நேரம் கழித்துக் குளிக்க வேண்டும். வாரம் ஒரு முறை இவ்வாறு செய்வது நல்லது.

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்
TAMIL NADU URBAN LIVELIHOODS MISSION
Empowering Lives

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகள் ஆய்வு மற்றும் வங்கிக் கடனுதவிகள் வழங்குதல்

கடலூர் மாவட்டத்தில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகளை தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் (பொ) முனைவர் ஜெ. யு. சந்திரகலா, இ.ஆ.ப., அவர்கள் 17.10.2020 அன்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வில் பண்ருட்டி நகராட்சி பகுதியில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் செயல்படும் ஸ்ரீமுத்து மாரியம்மன் சுய உதவிக் குழுவின் நாப்கின் தயாரிப்பு மையம், முந்திரி தரம் பிரித்தலில் ஈடுபட்டு வரும் ஸ்ரீஅம்புஜவள்ளி மகளிர் சுய உதவிக்குழு, சத்து மாவு தயாரித்தலில் ஈடுபட்டு வரும் வேதாத்திரி மகளிர் சுய உதவிக் குழு மற்றும் பொம்மைகள் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள ஜான்சிராணி சாலையோர வியாபாரிகள் CLG ஆகியவற்றின் செயல்பாடுகளை மேலாண்மை இயக்குநர் (பொ) அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்து, விற்பனை, சந்தை வாய்ப்புகள் போன்றவை குறித்த விபரங்களைக் கேட்டறிந்ததுடன், சிறப்பாக செயல்படுவதற்கான ஆலோசனைகளையும் வழங்கினார்.

தொடர்ந்து, நெல்லிக்குப்பம் நகராட்சி பகுதியில் பகுதி அளவிலான கூட்டமைப்பின் உறுப்பினர்களுடன் கலந்துரையாடல் மேற்கொண்ட மேலாண்மை இயக்குநர் (பொ) அவர்கள் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கி கடன் இணைப்பு, சாலையோர வியாபாரிகளுக்கு PM-SVANidhi திட்டத்தின் கீழ் கடனுதவி ஆகியவற்றை வழங்கினார். இந்த ஆய்வின் போது கடலூர் மாவட்ட நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி. பூ. காஞ்சனா மற்றும் உதவித் திட்ட அலுவலர்கள் உடன் இருந்தனர்.

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் நகர்ப்புறங்களில் வசிக்கும் ஏழை மக்களின் வறுமையைப் போக்கிட பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அதன் ஒரு பகுதியாக தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தில் பதிவு செய்துள்ள நகர்ப்புற தெருவோர வியாபாரிகளின் பொருளாதார வளர்ச்சிக்காக அவர்களுக்கு கடன் வழங்கும் வகையில் "பிரதம மந்திரி ஆத்ம நிர்பார் (PM-SVANidhi)" தெருவோர வியாபாரிகளுக்கான சுய சார்பு திட்டம்) என்ற பெயரில் புதிய திட்டம் துவங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் நகர்ப்புற தெருவோர வியாபாரிகளுக்கு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் ரூ. 10,000/ கடனாக வழங்கப்படுகிறது. இக்கடனுதவி பெற்ற தெருவோர வியாபாரிகள் தங்களின் வெற்றிக் கதைகளை முற்றம் இதழின் வாயிலாக பகிர்ந்து கொள்கின்றனர்.

விழுப்புரம் மாவட்டம்

வாழ்வாதார வளர்ச்சி தந்த இயக்கம்

எனது பெயர் ஐயப்பன், விழுப்புரம், கே. கே. ரோடு, ராஜீவ்காந்தி நகரில் வசித்து வரும் நான், பூட்டு மற்றும் பிளாஸ்டிக் பொருட்களை தெருவோரங்களில் கடை வைத்தும், வீதி வீதியாக சென்றும் விற்பனை செய்து மிக குறைவான வருவாய் பெற்று வருகிறேன். தெருவோர வியாபாரியான எனக்கு தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் எனக்கு BIO-Metric – ID Card வழங்கப்பட்டது.

இந்நிலையில் கோவிட் 19 ஊரடங்கின் காரணமாக எனது தொழிலில் முடக்கம் ஏற்பட்டு எனக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டது. இந்நிலையில் விழுப்புரம் மாவட்ட நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் தெருவோர வியாபாரிகளுக்கான பிரதம மந்திரியின் PM-SVANidhi திட்டத்தின் கீழ் மூலம் கடனுதவி பெற இணையதளம் வழியாக விண்ணப்பித்தேன். எனது விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டு விழுப்புரம் கிளை சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா மூலம் எனக்கு ரூ. 10,000/ கடன் வழங்கப்பட்டது. தக்க சமயத்தில் கிடைத்த இந்த கடனுதவி எனது தொழிலினை மறுசீரமைப்பு செய்திட மிகவும் உதவியாக இருந்தது. தற்போது நான் எம்.ஜி. ரோடு, சீத்தாராமன் தியேட்டர் அருகில் நிலையாக எனது வியாபாரத்தினை தொடங்கியுள்ளேன். இதன் மூலம் எனக்கு தினசரி ரூ. 600/ வரை வியாபாரம் நடைபெறுகிறது. எனது குடும்ப நிலையினை மேம்பாடு அடையச் செய்த தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்திற்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருவண்ணாமலை மாவட்டம்

வாழ்வளித்த வாழ்வாதாரத் திட்டம்

திருவண்ணாமலை நகராட்சிக்குட்பட்ட பகுதியில் வசித்து வரும் என் பெயர் அஞ்சலை (க/பெ. பிச்சாண்டி), நான் கடந்த 15 ஆண்டுகளாக மொத்தமாக கீரை வகைகளை வாங்கி அவற்றை தலைச்சுமையாக எடுத்துச் சென்று விற்பனை செய்து வாழ்ந்து வருகிறேன்.

தற்போது கோவிட் 19 ஊரடங்கினால் வாழ வழியின்றி எனது வாழ்வாதாரமே கேள்விக்குறியானது. அப்போதுதான் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் மாண்புமிகு பாரத பிரதமரின் வாழ்வாதாரத் திட்டமான பிரதான் மந்திரி ஆத்ம நிர்பார் யோஜனா (PM-SVANidhi) திட்டத்தின் கீழ் தெருவோர வியாபாரிகளுக்கான கடன் உதவி கோரி விண்ணப்பித்த எனக்கு எந்தவித பிணையும் இன்றி இந்த கோவிட் 19 காலத்தில் மீண்டும் என் தொழில் தொடங்க பஞ்சாப் நேஷனல் வங்கியின் மூலம் ரூ.10,000/ம் கடனாக வழங்கப்பட்டது. இந்தக் கடன் தொகையை முதலீடாக வைத்து நான் இன்று மீண்டும் எனது தொழிலை தொடங்கி நாள் ஒன்றுக்கு ரூ.450/ வரை வருமானம் பெற்று வருகின்றேன்.

PM-SVANidhi திட்டத்தின் மூலம் எனக்கும், என் குடும்பத்திற்கும் நல்வழி காட்டிய தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்திற்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தேனி மாவட்டம்

தொழில் வளர்ச்சிக்கு உதவிய திட்டம்

என் பெயர் பிரேமா (க/பெ. ஈஸ்வரன்), நான் கடந்த 10 ஆண்டுகளாக தேனி நகராட்சி பகுதியில் தெருவோரத்தில் தள்ளுவண்டியில் ஆரஞ்சு, ஆப்பிள் போன்ற பழங்களை வைத்து விற்பனை செய்து நாளொன்றுக்கு ரூ. 500/ வரை வருவாய் பெற்று வந்தேன். எனது கணவர் வாடகை ஆட்டோ ஓட்டுனராக உள்ளார். எனக்கு தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் தேனி நகராட்சியின் மூலம் சாலையோர வியாபாரிகளுக்கான அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் கொரோனாவின் தாக்கத்தினால் அறிவிக்கப்பட்ட ஊரடங்கு காரணமாக எனது தொழில் முற்றிலும் முடங்கி விட்டது. என் கணவருக்கும் போதிய வருமானம் இல்லை. எனவே, அன்றாட உணவு தேவைக்கே மிகவும் கடினமான காலகட்டத்தில் எங்கள் குடும்பம் தத்தளித்து வந்தது,

இச்சமயத்தில் எனக்கு தேனி நகராட்சியில் செயல்படும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் அலுவலர்கள் உதவியோடு தெருவோர வியாபாரிகளுக்கு கடனுதவி வழங்கும் பாரதப் பிரதமரின் PM-SVANidhi திட்டத்தின் மூலம் தேனி கிளை ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா வங்கியில் ரூ.10,000/ கடனுதவி வழங்கப்பட்டது. மேற்கண்ட தொகையினைக் கொண்டு எனது கடைக்குத் தேவையான பழ வகைகளை கொள்முதல் செய்து கடையை மீண்டும் புது பொலிவுடன் நடத்தி வருகிறேன். தற்போது எனக்கு தினசரி வருமானமாக ரூ. 600/ வரை கிடைக்கிறது. எனது வாழ்வாதாரத்தை மேம்படுத்த உதவிய தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்திற்கு எனது உளப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இராமநாதபுரம் மாவட்டம்

வறுமையைப் போக்கிய திட்டம்

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி நகராட்சி, சோமநாதபுரம் பகுதியில் வசித்து வரும் என் பெயர் அன்னமயில், நான் தனியார் நிறுவனத்தில் கடன் பெற்று எனது பகுதியில் சிறிய அளவில் தெருவோரத்தில் பழக்கடை வைத்துள்ளேன். இதன் மூலம் கிடைத்த குறைந்த வருமானத்தில் எனது குடும்பத்தை நடத்தி வந்தேன். பரமக்குடி நகராட்சியில் செயல்படும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் மூலம் எனக்கு தெருவோர வியாபாரிகளுக்கான அடையாள அட்டை வழங்கப்பட்டது. திட்ட இயக்குநர் அவர்களின் பரிந்துரையில் தெருவோர வியாபாரிகளுக்கான மானியத்துடன் கூடிய தனி நபர் கடன் ரூ.50,000/ பெற்றுத் தரப்பட்டது. அத்தொகையின் மூலம் எனது தொழிலை விரிவுபடுத்தி நல்ல முறையில் வியாபாரம் செய்து வந்தேன். எனது வாழ்வாதாரம் முன்னேற்றம் அடைந்து வந்தது.

இந்நிலையில் கொரோனா ஊரடங்கால் எனது வியாபாரம் முடங்கி எனது வாழ்வாதாரம் பாதித்து இருந்தது. அப்போது தெருவோர வியாபாரிகளுக்கு பிரதம மந்திரியின் எளிய கடன் வழங்கும் PM-SVANidhi திட்டம் பற்றி தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் மூலம் அறிந்த நான், அந்தக் கடன் பெற கணினி மூலம் விண்ணப்பித்தேன். எனது விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டு, கனரா வங்கியின் மூலம் எனக்கு ரூ. 10,000/ கடன் வழங்கப்பட்டது. அந்தக் கடன் தொகையைக் கொண்டு எனது கடைக்குத் தேவையான பொருட்களை வாங்கி வியாபாரம் செய்யத் துவங்கியுள்ளேன். எனது வாழ்வில் புது மலர்ச்சி ஏற்படுத்தியுள்ள தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்திற்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கரூர் மாவட்டம்

தொழில் வளர்ச்சிக்கு உதவிய திட்டம்

கரூர் நகராட்சி, கருப்பாகவுண்டன் புதூர் 32வது வார்டில் வசித்து வரும் வி. ராஜ் என்கிற நான், கரூர் நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் கடந்த 32 வருடங்களாக காலணிகள் தயாரித்தல் மற்றும் பழுது நீக்குதல் தொழில் செய்து, எனது குடும்பத்தை நடத்தி வருகிறேன். கொரோனா ஊரடங்கு காலகட்டத்தில் போதிய வருமானம் இன்றி நான் மிகவும் சிரமத்திற்கு உள்ளானேன். அந்த சமயத்தில் தெருவோர வியாபாரிகளுக்கு கடனுதவி வழங்கும் PM-SVANidhi திட்டத்தை பற்றி தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் வாயிலாக அறிந்து கொண்டேன்.

பாரதப் பிரதமரின் PM-SVANidhi திட்டத்தில் எனது விபரங்களைப் பதிவு செய்து கடன் பெற விண்ணப்பித்தேன். எனக்கு கடனுதவியாக ரூ.10,000/ நான் கணக்கு வைத்துள்ள இந்தியன் வங்கி, தேர்வீதி கிளை மூலம் வழங்கப்பட்டது. இந்தக் கடன் தொகை எனது கஷ்டத்திலிருந்து மீளவும், மீண்டும் தொழிலை துவங்கவும், பேருதவியாக இருந்தது.

தற்பொழுது தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் 5 உறுப்பினர்களைச் சேர்த்து ஸ்ரீ ராகவேந்திரா CLG என்ற குழுவினை உருவாக்கி அதன் தலைவராக உள்ளேன். தெருவோர வியாபாரியான நான் கடனுதவி பெற்று மீண்டும் எனது தொழிலைத் துவங்கிட பெரிதும் உறுதுணையாக இருந்த தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்திற்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திண்டுக்கல் மாவட்டம்

வளமான வாழ்விற்கு வழிகாட்டிய இயக்கம்

திண்டுக்கல் மாவட்டம், பழனி நகராட்சி, ஜீவானந்தம் ரோடு பகுதியில் வசித்து வரும் என் பெயர் செ. ராஜா. நான் பழனி நகராட்சிப் பகுதியில் சாலையோரத்தில் கடந்த 7 ஆண்டுகளாக கரும்புச்சாறு வியாபாரம் செய்து வருகின்றேன். சென்ற ஆண்டு வரை கையால் சுற்றும் இயந்திரத்தின் மூலம் கரும்பு பிழிந்து வியாபாரம் செய்து வந்த நான் இவ்வருட துவக்கத்தில்தான் இயந்திரம் மூலம் கரும்புச் சாறு பிழிந்து கொடுக்கும் முறைக்கு மாறினேன், ஆனால், ஒரு மாத காலத்திற்குள்ளேயே கொரோனா வைரஸ் பரவல் காரணமாக அறிவிக்கப்பட்ட ஊரடங்கின் காரணமாக தொழில் செய்ய இயலாத சூழ்நிலை ஏற்பட்டது. இதன் காரணமாக கையிருப்பிலுள்ள அனைத்து சேமிப்பும் கரைந்த நிலையில் உணவிற்கு கூட வருமானம் இல்லாத நிலைக்கு தள்ளப்பட்டு சிரம நிலைக்கு ஆளானேன். இந்நிலையில், பிரதம மந்திரியின் தெருவோர வியாபாரிகளுக்கான (PM-SVANidhi) சிறு கடன் உதவித் திட்டத்தின் கீழ், பழனி நகராட்சியில் செயல்படும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலின் பேரில், ரூ.10,000/ கடன் வழங்கப்பட்டது. இந்தக் கடன் தொகையினை தொழிலில் முதலீடு செய்து அதன் மூலம் வருவாய் பெற்று வருகிறேன். பெற்ற கடனை விரைவாக செலுத்துவதுடன் மறுகடன் (Repeated Lone) பெற்று எனது பொருளாதார நிலையை மேலும் உயர்த்திக் கொள்வேன். எனது தொழில் வளர்ச்சிக்கு உதவிய தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்திற்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொழிலை மீண்டும் துவக்க உதவிய திட்டம்

என்னுடைய பெயர் சின்னப்பொண்ணு, நான் நாகப்பட்டினம் மாவட்டம், நாகூர், ஆரியநாட்டு மேலப்பட்டினச்சேரியில் கடந்த 5 வருடங்களாக தெருவோரங்களில் மீன் வியாபாரம் செய்து வருகிறேன். கொரோனா ஊரடங்கு காலகட்டத்தில் என்னுடைய தொழில் மிகவும் பாதிக்கப்பட்டு வருமானத்திற்கு வழியில்லாமல் சிரமமான சூழ்நிலையில் இருந்தேன். அந்த நேரத்தில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் மூலம் பிரதான் மந்திரி ஆத்ம நிர்பார் யோஜனா (PM-SVANidhi) திட்டத்தின் கீழ் கடனுதவியாக பத்தாயிரம் ரூபாய் வழங்கப்பட்டது. தக்க சமயத்தில் எனக்குக் கிடைத்த கடனுதவியால் என்னுடைய சிறு தொழிலை நான் மீண்டும் தொடர முடிந்தது. தற்போது எனக்கு கணிசமான வருவாய் கிடைக்கிறது. எனது வாழ்வாதார வளர்ச்சிக்கும் வழி ஏற்படுத்திக் கொடுத்த தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்திற்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் பணிகள்

மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின், மகத்தான பணிகள் அறிவோமா!
அரசின் திட்டங்கள் என்னென்ன ? அது செய்து வருவதைக் காண்போமா!
வறுமையை விரட்டும் நோக்கோடும், வளத்தைத் தருகின்ற முனைப்போடும்
மகளிரையெல்லாம் ஒருங்கிணைத்து குழுக்கள் அமைப்பதை உணர்வோமா ?
குழுக்கள் அமைத்தல்; பயிற்சியைக் கொடுத்தல்; வாழ்வில் வளம் பெற தொழில்களை வளர்த்தல்
உதவிகள் செய்தல்; ஊக்கம் தருதல் விடியலைக் காண வழிவகை செய்தல்
இதுவே இந்த நிறுவனத்தின் தலைமைப் பணியாம் தெரிந்திடுவீர்! – தன்
இலக்கை விட்டு ஒரு போதும் விலகியதில்லை; புரிந்திடுவீர்!
ஊரகப் பகுதியின் வளர்ச்சிக்கும், நகர்ப்புற மக்களின் எழுச்சிக்கும்
வாழ்வாதார இயக்கங்களைச் சிறப்பாய் நிறுவனம் வழிநடத்தும்!
உழைக்கும் மகளிர் இல்லம் விட்டு, எளிதில் பணியிடம் செல்லுதற்கு
அம்மா ஸ்கூட்டர் திட்டத்தினை மானியத்துடனே செயல்படுத்தும்!
கைத் தொழில் கற்க, பயிற்சிகள் கிடைக்க, திறனை வளர்க்கும் திட்டங்கள் அறிய
மகளிர் திட்ட அலுவலகம் வந்தால், சுகமாய் விபரங்கள் சுமந்து செல்லலாம்!
வாழ்வாதார மேம்பாட்டிற்கு வளர்ச்சித் திட்டங்கள் பல உண்டு;
வங்கிக் கடன்கள் பெறுவதற்கும் திட்டங்கள் மூலம் வழி உண்டு!
மகளிர் உற்பத்திப் பொருட்களுக்கு விற்பனை வழிகளைக் காட்டியது;
நாட்டின் பலவித பகுதிகட்கு பொருட்களை அறிமுகப்படுத்தியது;
பொருளுக்கு ஏற்ற வருவாய் பெற்றிட மகளிர்க்கு நம்பிக்கை ஊட்டியது;
வாழ்வாதாரம் பெருகும் முறைகளை நிறுவனமே நிலை நாட்டியது!
மகளிர் சாதனை எடுத்துச் சொல்லும் ‘முற்றம்’ இதழைப் பார்த்ததுண்டா ?
மனதில் உறுதியை வளர்த்துவிடும் செய்திகள் இருப்பதைப் படித்ததுண்டா ?
மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் விளம்பர தீபம் அது தானே
சந்தா உறுப்பினர் ஆகிவிட்டால் ‘முற்றம்’ தேடி வரும்தானே!
எத்தனையெத்தனை திட்டங்கள் எல்லாம் மகளிர் உயர்வுக்கு!
நித்தமும் புதிய சிந்தனைகள் மகளிர் செல்வ வளர்ச்சிக்கு!
மகளிர் மேம்பாட்டு நிறுவனம் தான் பெண்களின் சக்தியைக் கூட்டியது;
சமூக, பொருளியல் வளர்ச்சியிலே மாபெரும் வெற்றியைக் காட்டியது...!

ஜா.சம்பத்
கூடுதல் இயக்குநர் (திறன் வளர்ப்பு)
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம்

முனைவர் ஜெ. யு. சந்திரகலா, இ.ஆ.ப., அவர்கள் தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்தின் புதிய தலைமைச் செயல் அலுவலராக 24.10.2020 அன்று பொறுப்பேற்றார்கள். அன்றைய தினம் தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்தின் மாநில அளவிலான செயல்பாடுகள் மற்றும் தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் கொரோனா சிறப்பு நிதியுதவி தொகுப்பின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு நடத்தி, செயல்பாடுகளை துரிதப்படுத்த அறிவுரைகள் வழங்கினார்கள். மேலும் காஞ்சிபுரம், செங்கல்பட்டு, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, வேலூர், ராணிப்பேட்டை மற்றும் திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களில் நடத்தப்பட்ட பகுப்பாய்வு முடிவுகளை மாவட்ட திட்ட செயலாக்க அலகின் குழுவினருடன் மாநில திட்ட அலுவலகத்தில் நேரடியாக ஆய்வு கூட்டங்கள் நடத்தி மாவட்ட அளவிலான செயல் திட்டம் உருவாக்கி செயல்படுத்துவது குறித்த ஆலோசனைகளையும், உரிய அறிவுரைகளையும் வழங்கினார்கள்.

சமூக இ–கற்றல் களம்

உலகளவில் சுமார் 500 மில்லியன் பயனர்களுடன், மிகப்பெரிய சமூக வலைப்பின்னல் தளமான முகநூல் (பேஸ்புக்) ஒரு முக்கியமான இ-கற்றல் களமாக மாறியுள்ளது.

இ-கற்றல் சூழலை வளர்ப்பதில் தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம் தொடர்ந்து முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இதன் பொருட்டு, தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம் 2020 அக்டோபர் மாதம் 14 மற்றும் 15ஆம் தேதிகளில் மாவட்டம் மற்றும் வட்டார அளவிலான திட்டப் பணியாளர்களை உள்ளடக்கிய ஒரு ஆன்லைன் பயிற்சியை நடத்தியது.



புதிதாக உருவாக்கப்பட்ட தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்ட முகநூல் (பேஸ்புக்) இ-கற்றல் தளக்குழுவில் சேரவும், பங்கேற்கவும் திட்டப் பணியாளர்களை ஊக்குவிப்பதற்காகவும் இந்த ஆன்லைன் பயிற்சி நடத்தப்பட்டது. இந்த முகநூல் (பேஸ்புக்) இகற்றல் குழுவானது அனைத்து திட்டப் பணியாளர்களுக்கும் ஒரு இ-கற்றல் வளர் தளத்தை உருவாக்கும். அதில் திட்டப் பணியாளர்களிடையே கருத்துக்களை விவாதிக்கவும் மற்றும் பரிமாறிக் கொள்ளவும், அனைத்து மாவட்டங்களுக்கும் அனுபவ வெளிப்பாட்டைக் கொடுக்கவும், பெறவும், தமிழகம் முழுவதும் பின்பற்றப்பட்ட சிறந்த செயல்பாடுகளைத் தெரிவிக்கவும், திட்டத்தின்அறிவு களஞ்சியத்தை உருவாக்கவும் உதவுகிறது.

முகநூல் குழுவின் அறிமுகத்தில் ஆரம்பித்து, முகநூல் குழுக்களைப் பயன்படுத்துவதற்கான அடிப்படை, மற்றும் முகநூல் குழுவில் செய்ய வேண்டியவை மற்றும் செய்யக் கூடாததையும், பதிவுகளை எவ்வாறு

வழிநடத்துவது, கருத்து தெரிவிப்பது மற்றும் பகிர்வதைப் பற்றியும், திருமதி. மீரா ராஜகோபாலன் அவர்கள் இந்த ஆன்லைன் பயிற்சியில் கற்பித்தார். இந்த முகநூல் (பேஸ்புக்) இ-கற்றல் ஆன்லைன் அமர்வையும் மாநிலத் திட்டக் குழு மற்றும் உலக வங்கி குழு தொகுத்து வழங்கின. இந்த வகையான அமர்வுகள் தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்தின் மேம்பாட்டிற்காக மேலும் திட்டமிடப்பட்டு வருகிறது.

ஏற்றம் தந்த ஊரகப் புத்தாக்கத் திட்டம்

என் பெயர் கார்த்திகேயன், என் தந்தை பெயர் மனோகரன். நான் விழுப்புரம் மாவட்டம், தென்மங்கலம் ஊராட்சியில் வசித்து வருகிறேன். திருவெண்ணெய் நல்லூர் ஒன்றியத்தில் உள்ள இருவேல்பட்டு ஊராட்சியில் செயல்பட்டு வரும் விவசாயத் துறையின் மூலமாக எங்கள் ஊரில் 5 உழவர் ஆர்வலர் குழுக்களை ஆரம்பித்து, வங்கியில் கணக்கு துவங்கினோம். ஒவ்வொரு குழுவிலும் 20 நபர்கள் வீதம் 5 குழுக்களிலும் மொத்தம் 100 நபர்கள் உள்ளனர். ஒவ்வொரு குழுவில் இருந்தும் 3 நபர்களைத் தேர்வு செய்து மொத்தம் 15 நபர்களை கொண்டு தென்மங்கலம் உழவர் உற்பத்தியாளர் குழுவை ஆரம்பித்து, இக்குழுவின் பெயரில் வங்கிக் கணக்கை துவக்கினோம். விவசாயத் துறையின் மூலமாக ஐந்து இலட்சம் ரூபாய் எங்களுக்கு வழங்கப்பட்டது. இந்தத் தொகையைக் கொண்டு ஒரு ரொட்டவேட்டர், பவர் டிரில்லர் மற்றும் நடவு நடும் இயந்திரம் வாங்கினோம். தற்போது இந்த இயந்திரங்கள் மூலம் எங்கள் குழு உறுப்பினர்கள் மற்றும் ஊராட்சியில் உள்ள பிற விவசாயிகளும் பயன் பெற்று வருகிறோம்.

தற்போது கொரோனா வைரஸ் தொற்று பரவல் காரணமாக தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் மூலம் கொரோனா19 சிறப்பு மூலதன நிதி வழங்குவதைத் தொடர்ந்து, எங்கள் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மற்றும் விவசாய துறையின் மூலமாக எங்களின் உழவர் உற்பத்தியாளர் குழுவிற்கு தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்தின் மூலமாக சிறப்பு நிதி வழங்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்தார்கள். அதனைத் தொடர்ந்து நாங்கள் திருவெண்ணெய் நல்லூர் ஒன்றியத்தில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் அலுவலர்களை சந்தித்தோம். அவர்கள் எங்கள் உழவர் உற்பத்தியாளர் குழுவின் தீர்மானங்கள், பதிவேடுகள் மற்றும் வங்கிப் புத்தகம் ஆகியவற்றை ஆய்வு செய்தார்கள்.

எங்கள் குழு சிறப்பாக செயல்பட்டு கொண்டிருந்ததால் எங்கள் குழுவிற்கு ரூ.1,50,000/ வழங்குவதற்கான அனைத்து ஆவணங்களையும் தயாரிக்க உதவிகள் செய்தார்கள். நாங்கள் தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்தின் விதிமுறைப்படி விலைப்புள்ளிகள் பெற்று பவர் ஸ்பிரேயர், பேட்டரி ஸ்பிரேயர் மற்றும் ரொட்டவேட்டர் ஆகியவற்றைப் பெற்றோம். இதன் மூலம் விவசாய பணிகள் மேற்கொள்ள வசதியாக உள்ளது. தற்போது இதன் மூலம் எங்கள் தென்மங்கலம் உழவர் உற்பத்தியாளார் குழு சிறப்பாக செயல்படும். எங்கள் குழுவிற்கு கடன் பெற்றுத் தந்த தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்திற்கு எங்கள் குழுவின் சார்பாக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கந்து வட்டியிலிருந்து காத்த ஊரக புத்தாக்கத் திட்டம்

என் பெயர் பவானி, நான் திருவள்ளூர் மாவட்டம், சுண்ணாம்புகுளம் ஊராட்சியில் செயல்படும் பெண்கள் சுய உதவி குழு 7ல் உறுப்பினராக உள்ளேன். எனக்கும் எனது குடும்பத்தாருக்கும் வாழ்வாதாரம் அளித்து வருவது மீன்பிடி தொழிலாகும். நாங்கள் கந்து வட்டிகாரர்களிடம் கடன் பெற்று சொந்தமாக மீன்பிடி படகு ஒன்றை வாங்கினோம். இதன் மூலம் வரும் வருமானத்தைக் கொண்டு எனது குடும்ப செலவினங்கள் மற்றும் பிள்ளைகளின் படிப்பு செலவுகளை மேற்கொண்டு வந்தோம்.

இந்நிலையில் கொரோனா19 தொற்று காரணமாக ஊரடங்கு அறிவிக்கப்பட்டு, காவல் துறை கட்டுப்பாட்டில் உள்ள காரணத்தினால் மீன் பிடிதொழில் மிகவும்

பாதிக்கப்பட்டது. மீன்பிடி படகுக்கு டீசல் வாங்க 5 கிலோ மீட்டர் தொலைவு செல்ல வேண்டும். ஆனால் ஊரடங்கு காரணமாக செல்ல முடியவில்லை. அப்படி மீன் பிடித்தும் மீன்களை விற்பனை செய்ய முடியவில்லை. சேமித்த பணத்தை சிக்கனமாக செலவு செய்தும் எங்கள் குடும்பம் வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டது. வாங்கிய கந்து வட்டிக்கு வட்டி செலுத்த முடியாமலும், ஊரே வறுமையில் உள்ளதால் யாரிடமும் பொருள் உதவியோ பண உதவியோ பெற முடியவில்லை. எங்கள் நிலையை புரிந்து எங்கள் படகினை கந்து வட்டிக்காரர் குறைந்த விலைக்கு விற்கும்படி பேரம் பேசினார். அந்த சூழ்நிலையில் நாங்கள் பெரும் மன உலைச்சலுக்கு உள்ளானோம்.

அந்த நேரத்தில் தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்தின் மூலம் கோவிட் 19 சிறப்பு நிதி வாயிலாக தனிநபர் தொழில் முனைவோருக்கு அவர்களின் தொழிலை மேம்படுத்த நிதி உதவி அளிப்பதாக அறிந்தேன். எங்கள் மகளிர் சுய உதவிக் குழு மூலம் அக்கடனுக்கு விண்ணப்பித்தேன். என் விண்ணப்பத்தினை ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு ஏற்று எனக்கு ரூ. 50,000/ கடனாக வழங்கினர். இந்தக் கடனை 36 தவணைகளில் திரும்ப செலுத்த வேண்டும் என கூறினர். நான் பெற்ற கடன் தொகையில் மீன்பிடி வலை மற்றும் படகினை சீரமைப்பு செய்தேன். மீதம் உள்ள தொகையைக் கொண்டு நான் பெற்ற கந்து வட்டியின் அசல் மற்றும் வட்டியை திரும்ப செலுத்தினேன்.

உலகமே கொரோனா பாதிப்புக்கு உள்ளான நேரத்தில், நிதி நிறுவனங்கள் மற்றும் வங்கிகள் கடன் வழங்க தயங்கிய சமயத்தில் தமிழக அரசின் வாயிலாக ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் மூலம் நிதியுதவி பெற்ற என்னை போன்ற தாய்மார்களுக்கு கடன் வழங்கி வாழ்வாதார வளர்ச்சிக்கு உதவிய ஊரகப் புத்தாக்கத் திட்டத்திற்கு எனது குடும்பத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

“ஓடம் ஒரு நாள் வண்டியிலேறும்
- பழமொழி

கந்து வட்டி ஒரு நாள் ஓடத்தில் ஏறும்
- புதுமொழி”

புதிய கோணத்தில் முன்னேற்றம்

என் பெயர் இ. கிருஷ்ணவேணி, நான் திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை ஒன்றியம், புத்தாநத்தம் என்னும் கிராமத்தில் வசித்து வருகிறேன். உங்கள் பகுதியில் செயல்படும் எத்திராஜு அம்மன் சுய உதவிக் குழுவில் உறுப்பினராக இருக்கும் நான் புத்தாநத்தத்தில் போட்டோ ஸ்டுடியோ வைத்து அதன் மூலம் வருவாய் பெற்று வருகிறேன்.

தற்போது கொரோனா பாதிப்பின் காரணமாக அறிவிக்கப்பட்ட ஊரடங்கினால் சுப நிகழ்ச்சிகள் அதிகம் நடைபெறாமல், கடந்த மூன்று மாதங்களாக தொழில் எதுவும் செய்ய முடியாமல் சிரமப்பட்டேன். நான் வெளியில் பொதுவாக போட்டோ எடுக்கச் செல்வதில்லை. ஸ்டுடியோவிலேயே புகைப்படம் எடுப்பது அல்லது மென்வடிவில் புகைப்படங்கள் வந்தால் அதனை வடிவமைத்து பிரிண்ட் எடுத்துக் கொடுப்பதனை மட்டுமே செய்து வருகிறேன். தற்போது ஊரடங்கில் சில தளர்வுகள் அறிவிக்கப்பட்டதால், என் தொழிலில் மெல்ல முன்னேற்றம் ஏற்பட்டு வருகிறது. அதற்கு மற்றொரு முக்கிய காரணம் தரமாக புகைப்படம் எடுக்க நான் வாங்கியுள்ள புதிய காமிரா ஆகும். இதற்காக தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்தில் இருந்து ரூ.40,000/ கடனுதவி, நான் உறுப்பினராக உள்ள சுய உதவிக் குழு மூலம் வழங்கப்பட்டது. மேற்கொண்டு பணம் செலுத்தி புதிய காமிராவினை வாங்கியுள்ளேன். தற்போது புது உற்சாகத்தோடு என்னுடைய புதிய காமிராவில் காட்சிகளை படம் எடுத்து வருகிறேன். என் தொழிலை மேம்படுத்த சரியான நேரத்தில் நல்ல காமிரா வாங்க உதவிய தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்திற்கு என் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாழ்வாதாரத்தை மேம்படுத்திய தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம்

என் பெயர் சசிகலா, நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு ஒன்றியம், கருமாபுரம் ஊராட்சி குடித்தெருவில் வசித்து வரும் நான், கடந்த இரண்டு வருடங்களாக கறிக்கோழி வளர்ப்புத் தொழிலை செய்து வருகின்றேன். கறிக்கோழி வளர்ப்பிற்கான கோழித்தீவனத்தை ஈரோட்டில் உள்ள தனியார் நிறுவனத்தில் வாங்கி வந்து, கோழிகளுக்கு கொடுத்து, பின்னர் கோழிகளை விற்பனை செய்து வந்தேன். இதன் மூலம் எனக்கு மாத வருமானமாக ரூ. 15,000/ வரை கிடைத்து வந்தது.

இந்நிலையில் கோவிட் 19 ஊரடங்கு காரணமாக கடந்த நான்கு மாதங்களாக எனது தொழில் பாதிக்கப்பட்டு, தேவையான கோழித்தீவனம் கிடைக்காமல், கறிக்கோழி வளர்ப்பு தொழில் பாதிக்கப்படும் நிலையில் இருந்தபோது, தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்தின் மூலம் கருமாபுரம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கு கோவிட் 19 சிறப்பு நிதி வந்ததாக அறிந்தேன். அதன் மூலம் நான் உறுப்பினராக இருக்கும் ஸ்ரீவிநாயகா மகளிர் சுய உதவிக் குழுவில் கறிக்கோழி வளர்ப்புத் தொழிலுக்கு தொழில் கடன் பெறுவதற்கு விண்ணப்பித்தேன். எனது விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டு கருமாபுரம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மூலம் தொழில் கடனாக ரூ. 40,000/ பெற்றேன்.

இந்தத் தொகையைக் கொண்டு, கறிக்கோழி வளர்ப்பிற்குத் தேவையான கோழித்தீவனம் மற்றும் மூலப் பொருட்களை மொத்தமாகக் கொள்முதல் செய்து, அரைத்து, கறிக்கோழிகளுக்கு தீவனமாகக் கொடுத்து வருகின்றேன். இதனால் எனது தொழில் நலிவடையாமலும். வருமானம் பாதிக்கப்படாமலும் இருந்து வருகின்றது. எனக்கு இதன் மூலம் மாதம் ரூ. 17,000/ வரை வருவாய் கிடைக்கிறது. எனது தொழில் மேம்பட கடனுதவி வழங்கி, எனது வாழ்வாதாரத்தை மேம்படுத்திய தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்திற்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தக்க சமயத்தில் உதவிய ஊரக புத்தாக்கத் திட்டம்

என் பெயர் மங்கம்மாள், (க.பெ. வெங்கடேசன்). கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி வட்டாரத்தில் உள்ள பெத்ததாலப்பள்ளி கிராமத்தில் வசித்து வரும் நான் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவர். எங்கள் ஊரின் அருகில் கிருஷ்ணகிரி அணை உள்ளது. இங்கு மீன் பிடிக்கும் தொழில் நடைபெறுவதால், குறைந்த விலையில் அதிக அளவில் மீன்கள் கிடைக்கும். நான் கடந்த 10 வருடங்களுக்கு முன்னர் மீன் வருவல் கடை வைக்க முடிவு செய்து கல் மீன் வருவல் கடை துவங்கினேன். அதன் மூலம் குடும்பத்திற்குத் தேவையான வருவாய் கிடைத்தது.

கொரோனா வைரஸ் தொற்று பரவல் காரணமாக கடந்த மார்ச் மாதம் முதல் ஊரடங்கு உத்தரவு நடைமுறைப் படுத்தப்பட்டதால் என்னால் கடையை நடத்த முடியவில்லை. மூன்று மாதமாக வருமானம் இல்லாததால், குடும்பம் நடத்தவே முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. மீண்டும் கடையை திறக்க மூலப்பொருட்கள் வாங்கவும், கடையை சீரமைக்கவும் பணம் இல்லாமல் சிரமப்பட்டேன்.

இந்த நிலையில் தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்தின் மூலம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மீண்டும் தொழில் தொடங்க கடனுதவி வழங்குவதாகக் கேள்விப்பட்டேன். நான் ஏற்கனவே ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் உறுப்பினராக இருப்பதால் கடன் பெற விண்ணப்பித்தேன். எனது விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டு, எனக்கு ரூ.50,000/ கடனாக வழங்கப்பட்டது. இந்தத் தொகையைக் கொண்டு நான் எனது கடையை சீரமைத்து, மூலப் பொருட்கள் வாங்கி மீண்டும் வியாபாரத்தை தொடங்கியதால், தற்போது எனது குடும்பத்திற்கு தேவையான வருமானம் வருகிறது.

எனக்கு இந்த வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்த தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்திற்கும், தமிழ்நாடு அரசுக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்றக் கச்சேரி

அன்புள்ள முற்றம் வாசகர்களே

சுய உதவிக் குழுவின் ஊக்குநர் மற்றும் உறுப்பினர்களிடையே நடைபெறும் உரையாடல்கள் மற்றும் கேள்வி பதில்கள் வாயிலாக மகளிர் சுய உதவிக் குழுக்களின் முன்னேற்றத்திற்காக செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்கள் குறித்த விபரங்களை அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் முற்றக் கச்சேரி வெளியிடப்படுகிறது. இது உங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என நம்புகிறோம். இனி முற்றக் கச்சேரிக்குள் போவோமா...

இடம் : சுய உதவிக் குழு அலுவலகம்

கதை மாந்தர்கள் :

ஊக்குநர் மதி, உறுப்பினர்கள் வடிவு, கமலா, கோமதி ஆகியோர்

ஊக்குநர் மதி சுய உதவிக் குழு அலுவலகத்தில் அமர்ந்திருக்கிறார். குழுவின் உறுப்பினர்களான வடிவு, கமலா, கோமதி ஆகிய மூவரும் அலுவலகத்தின் வெளியே இருக்கும் தண்ணீர் குழாயில் கைகளை நன்கு சோப்பு போட்டு கழுவி விட்டு அலுவலகத்திற்குள் வருகின்றனர். அனைவரும் முகக் கவசம் அணிந்துள்ளனர்.

கமலா, வடிவு, கோமதி : மதி அக்கா... மதி அக்கா...

மதி : வாங்க... வாங்க... வந்து உட்காருங்க...

மூவரும் இடைவெளி விட்டு அமர்கின்றனர்.

கமலா : என்னக்கா இந்த மாதம் எதைப்பத்தி சொல்லப் போறீங்க?

மதி : சுய உதவிக் குழுக்களுக்கு ஊக்கமளிக்கும் சமுதாய முதலீட்டு நிதி பற்றி சொல்லப் போகிறேன்.

கோமதி : சமுதாய முதலீட்டு நிதியா? சுய உதவிக் குழுக்களுக்கு ஊக்கமளிக்குமா? என்ன சொல்றீங்க அக்கா?

மதி : ஆமா... சுய உதவிக்குழுக்களின் பொருளாதார வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கும் சமுதாய முதலீட்டு நிதியைப் பத்திதான் உங்களுக்கு இந்த மாதம் சொல்லப்போறேன்.

வடிவு : சமுதாய முதலீட்டு நிதின்னா என்ன அக்கா?

மதி : சமுதாய முதலீட்டு நிதி என்பது பொருளாதார நடவடிக்கைகள் மேற்கொள்ளும் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும் நிதியாகும்.

வடிவு : இந்த நிதியை யார் கொடுப்பாங்க அக்கா?

மதி : ஊராட்சி அளவில், சமுதாய முதலீட்டு நிதி விடுவிக்கும் பொறுப்பு ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளையே சேரும்.

கமலா : ஒவ்வொரு சுய உதவிக் குழுவுக்கும் எவ்வளவு ரூபாய் தருவாங்க அக்கா?

மதி : அதிகபட்சமாக ஒரு சுய உதவிக் குழுவிற்கு ரூ.50,000/- வீதம் திட்ட நிதியிலிருந்து தருவாங்க.

கோமதி : இந்த நிதியை எதுக்கு பயன்படுத்த வேண்டும் அக்கா?

மதி : சுய உதவிக் குழுக்களின் பொருளாதார நடவடிக்கைகளுக்காக மட்டுமே சமுதாய முதலீட்டு நிதியைப் பயன்படுத்த வேண்டும்.

கமலா : இந்த சமுதாய முதலீட்டு நிதியை வாங்க ஒரு சுய உதவிக் குழுவிற்கு என்ன தகுதி வேண்டும் அக்கா?

மதி : சமுதாய முதலீட்டு நிதியை ஒரு குழு வாங்க வேண்டும் என்றால் அந்தக் குழுவானது சில தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும்.

கோமதி : என்னென்ன தகுதிகள் இருக்க வேண்டும் அக்கா?

மதி : குழு ஆரம்பித்து ஆறு மாதங்கள் முடிவடைந்திருக்க வேண்டும்; பஞ்சசூத்திரங்களை முறையாக பின்பற்ற வேண்டும்; ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் உறுப்பினராக இணைந்திருக்க வேண்டும்; உள்கடனை குழு உறுப்பினர்களுக்கு சுழற்சி முறையில் வழங்கி, அதனை காலந்தவறாமல் வசூலித்து இருக்க வேண்டும்; பொருளாதார நடவடிக்கைகளுக்கான நுண்நிதி கடன் திட்டம் தயாரித்து இருக்க வேண்டும். மேற்கண்டவற்றை சிறப்பாக கடைபிடிக்கும் சுய உதவிக் குழுதான் சமுதாய முதலீட்டு நிதி பெறும் தகுதியுடைதாகும்.

வடிவு : எந்த குழுவுக்காவது முன்னுரிமை தருவாங்களா அக்கா?

மதி : மாற்றுத்திறனாளி குழு மற்றும் முதியோர் சுய உதவிக் குழுவிற்கும் சமுதாய முதலீட்டு நிதி வழங்குவதில் முன்னுரிமை தருவாங்க.

கோமதி : சமுதாய முதலீட்டு நிதியை நமக்கு எப்படி தருவாங்க அக்கா?

மதி : ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றிய பிறகு, சுய உதவிக் குழுவின்

வங்கிக் கணக்கிற்கு ரூ. 50,000/- வழங்கப்படும். மேலும், சமுதாய முதலீட்டு நிதியினைக் கொண்டு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் உறுப்பினர்களிடையே சுழற்சி முறையில் கடன் வழங்கியிருக்க வேண்டும், மாறாக வங்கி சேமிப்பு கணக்கிலேயே வைத்திருக்கக் கூடாது.

கமலா : இந்த முதலீட்டு நிதிக்கு வட்டி எவ்வளவு அக்கா?

மதி : ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு 9% வட்டியுடன் சுய உதவிக் குழுக்களுக்கு கடன் வழங்கும். சுய உதவிக் குழுவானது உறுப்பினர்களுக்கு 12% வட்டியில் கடன் வழங்க வேண்டும்.

வடிவு : இந்த சமுதாய முதலீட்டு நிதிக்கு தனியா கணக்கு ஆரம்பிக்கணுமா அக்கா?

மதி : ஆமாம்... ஒவ்வொரு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிலும் சமுதாய முதலீட்டு நிதி கணக்கு என்ற தலைப்பில் தனியாக சேமிப்பு வங்கிக் கணக்கு பராமரிக்கப்பட வேண்டும்.

கமலா : நாம வாங்கும் இந்தக் கடனை எப்படி திரும்பச் செலுத்த வேண்டும் அக்கா?

மதி : கடன் வழங்கப்பட்ட தொழிலின் அடிப்படையில் 12 முதல் 24 சம தவணைகளில் திரும்ப செலுத்துதல் வேண்டும்.

வடிவு : இந்தக் கடனுக்காக ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் எந்த வகையான பதிவேடுகளைப் பராமரிக்கணும் அக்கா?

மதி : ரொக்கப் பதிவேடு, பொதுப் பேரேடு, கடன் பேரேடு, கடன் கண்காணிப்பு பதிவேடு ஆகிய பதிவேடுகளைப் பராமரிக்க வேண்டும்

கமலா : ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு சுய உதவிக் குழுக்களுக்கு நிறைய உதவிகளை செய்யுது தானே அக்கா?

மதி : ஆமாம்... சமுதாய முதலீட்டு நிதிக்கு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு பாதுகாவலராக இருக்கு. சுய உதவிக் குழுக்கள் 100% கடனை திருப்பி செலுத்துதல், முறையான பயன்பாடு, நிதியினை சுழற்சி முறையில் வழங்குதல் ஆகியவற்றை உறுதி செய்வதும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் முக்கிய பணியாகும்.

கமலா : சரி அக்கா நாங்க புறப்படறோம். சமுதாய முதலீட்டு நிதி தொடர்பாக எங்களுக்கு நிறைய விஷயங்கள சொல்லி புரிய வைச்சிருக்கீங்க. அதுக்கு ரொம்ப சந்தோஷம் அக்கா. நாங்க வரட்டுமா அக்கா?

மதி : சரி போயிட்டு வாங்க...

கமலா, கோமதி, வடிவு ஆகிய மூவரும் மதியிடம் விடைபெற்று, தங்களின் வீடுகளுக்குச் செல்கின்றனர்.

(முற்றக் கச்சேரி தொடரும்)

"தீப ஒளியாய் மிளிர்ந்திடுவோம்...!"

பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை,
அரிவை, தெரிவை, பேரிளம் பெண் என
பெண்ணினத்தை ஏழு நிலையாய் எழுதி வைத்தான்;
அதில் ஏழாயிரம் வலிகளைத் தாங்க வைத்தான்!

கருவில் பெண்ணைக் கொல்ல நினைத்தும்
கள்ளிப் பாலால் கருணையில்லா கொலை செய்தும்
கல்வி பயில இயலா தடைகளிருந்தும்
குழந்தைத் திருமணங்கள் நடந்த காலத்திலே
ஒன்றாய், இரண்டாய், ஒவ்வொன்றாய்
பன்னிரெண்டு மகளிருக்குக் குறையாமல்
ஒருங்கே சேர்ந்து ஒற்றை அமைப்பில்
மகளிர் குழுவாய் மாறினாயே!

கூட்டம் கூடி பேசும் பெண்கள்
நாட்டை ஆளவா போகிறார்கள் என
ஏளனம் பேசும் கூட்டத்திற்கெல்லாம்
வறுமை நிலையும் குடும்ப சுமையும்
குறைத்திடயெண்ணி உழைத்திடும் கூட்டமென
உயர்ந்து நிற்கும் மகளிர் சக்தியாய் மாறினாயே!

சுத்தம், சுகாதாரம் காத்திடயெண்ணி
தனிநபர் கழிப்பறை கட்டியவளாய்;
பிள்ளைகளெல்லாம் கல்வி பயின்றிட
வங்கியில் கடனும் வாங்கித் தந்தவளாய்;
தொற்றும், தொற்றா நோய்கள் குறித்தும்
விழிப்பாய் இருக்கவும், வராமல் காக்கவும்
வீதிகள் தோறும் உழைத்தவளாய்;
அரசின் திட்டங்கள் அனைத்தையுமே
தன் அடுப்படிக்கே அழைத்து வந்தவளாய்
சமூகப் பணிகள் பல செய்கின்றாயே!

நீ கட்டிடும் சந்தாவும் சேமிப்புமே
சில வங்கிகள் இயங்கக் காரணமாம்;
நீ கடன் பெற்று செலுத்தும் வட்டியில்தான்
வங்கியின் வருவாய் கூடிடுதாம்;
ஏழ்மை வறுமையை விரட்டிட நீ
சுய தொழில் ஒன்றை செய்திடுவாய்;
ஏழ்மை இருளை நீக்குகின்ற
"தீப ஒளியாய் மிளிர்ந்திடுவாய்"

செந்தில் பலராமன் (செயலர்),
தமிழ்நாடு மாநில வழங்கல் மற்றும் விற்பனை சங்கம்

வித்தியாசமான சுவையில் தக்காளி சாதம்

பிரியாணியின் சுவைக்கு ஈடாக தக்காளி சாதத்தை சுலபமான முறையில் குக்கரில் எப்படி செய்யலாம் என்பதை பற்றிதான் இந்த பதிவின் மூலம் தெரிந்து கொள்ளப் போகின்றோம்.

தேவையானப் பொருட்கள் :

எண்ணெய் 4 டேபிள் ஸ்பூன், நெய் 1 ஸ்பூன், சீரகம் 1/2 ஸ்பூன், சோம்பு 1/2 ஸ்பூன், அன்னாசிப் பூ 1, லவங்கம் 2, பெரிய அளவிலான பெரிய வெங்காயம் நீளவாக்கில் வெட்டியது 2, பச்சை மிளகாய் 3 கீனியது, மீடியம் சைஸ் தக்காளி பழுத்த பழம் 5 (மிகப் பொடியாக நறுக்கிக் கொள்ளவும்). இஞ்சி பூண்டு விழுது 2 ஸ்பூன், மிளகாய் தூள் 2 ஸ்பூன், மல்லித் தூள் 1/2 ஸ்பூன், மஞ்சள் தூள் 1/4 ஸ்பூன், தேவையான அளவு உப்பு, கொத்தமல்லி தழை ஒரு கைப்பிடி அளவு.

செய்முறை :

1/2 மூடி தேங்காயைத் துருவி, தேங்காய்ப் பால் தண்ணீர் பதத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். 2 கப் அளவு பாசுமதி அரிசிக்கு, 3 1/2 கப் தேங்காய் பால் போதும். தேங்காய் பாலின் அளவிற்கு, தண்ணீர் ஊற்றி தண்ணீர் பதத்தில் பாலை எடுத்துக் கொள்ள வேண்டும். தேங்காய் பால் திக்காக இருந்தால் தக்காளி சாதம் சுவையாக இருக்காது.

முதலில் குக்கரை அடுப்பில் வைத்து, எண்ணெய் ஊற்றி, சூடானதும் சீரகம், சோம்பு, அன்னாசிப்பூ, லவங்கம் ஆகியவற்றைப் போட்டு பொரிய விடுங்கள். அதன்பின் பெரிய வெங்காயத்தை சேர்த்து பொன்நிறமாக வதக்கவும். வெங்காயம் பொன்னிறமானவுடன் பச்சை மிளகாய், தக்காளியை சேர்க்க வேண்டும். தக்காளி முக்கால் பாகம் வெந்து வதங்கியவுடன், இஞ்சி பூண்டு பேஸ்ட் சேர்க்கவும், பின்னர் மிளகாய் தூள், மல்லித்தூள், மஞ்சள் தூள் ஆகியவைகளை சேர்த்து, எண்ணெய் தனியாக பிரிந்து வரும்வரை மசாலாப் பொருட்களை சிவக்க வைக்க வேண்டும்.

எல்லா பொருட்களும் வதங்கி எண்ணெய் பிரிந்து வருவதற்கு 15 நிமிடங்களில் இருந்து 20 நிமிடங்கள் வரை ஆகும். தக்காளி வெந்து வதங்கிய உடனேயே தீயை மிதமாக வைத்துக் கொள்ளுங்கள். அதன் பின் தயாராக எடுத்து வைத்திருக்கும் தேங்காய் பாலை ஊற்றி, லேசாக கொதி வந்தவுடன் பாஸ்மதி அரிசியைப் போட்டு, தேவையான அளவு உப்பை போட்டு, கிளறி விட்டு கொத்தமல்லி தழையை தூவி, நன்றாக கொதி வந்தவுடன் குக்கரை மூடி விசில் போட்டு, மிதமான தீயில் ஒரு விசில் வந்தவுடன் அடுப்பை அணைத்து விட்டு அதே சூட்டில் அடுப்பின் மீது குக்கரை விட்டு விடுங்கள். குக்கர் ஆவியிலேயே மீதம் இருக்கும் அரிசி வெந்து விடும். விசில் முழுக்க அடங்கியவுடன், குக்கரை திறந்து பார்த்தால் கமகம வாசத்தோடு தக்காளி சாதம் தயாராகியிருக்கும். சரியான முறையில் பொருட்களை சேர்த்து சமைத்தால் பிரியாணி சுவைக்கு ஈடான தக்காளி சாதம் தயார். பெரியவர்கள் முதல் சிறியவர்கள் வரை இந்த தக்காளி சாதத்தை விரும்பி சாப்பிடுவார்கள்.

உடலில் சர்க்கரையின் அளவை சரி செய்ய உதவும் பன்னீர் பூ

பன்னீர் பூ பார்ப்பதற்கு சுண்டைக்காய் போல் இருக்கும், இந்த பன்னீர் பூவானது சொலனேசி என்ற தாவர குடும்பத்தை சேர்ந்தது. ஆயுர்வேத பயன்பாட்டில் இதன் பங்கு அதிகம் உள்ளது. நீரிழிவு நோயாளிகளுக்கு வரப்பிரசாதமாக கிடைத்துள்ள இந்த பன்னீர் பூ எளிதாக மூலிகை கடைகளில் கிடைக்க கூடியது. நாட்டு மருந்து கடைகளில் பன்னீர் பூ கால் கிலோ வாங்கி கொள்ளுங்கள். இரவில் தூங்கும் முன் ஐந்து பூ எடுத்து தண்ணீரில் ஊற வைக்க வேண்டும்.

காலையில் எழுந்ததும் வெறும் வயிற்றில் அந்த பூ உள்ள தண்ணீரை வடிகட்டி வைத்து கொள்ள வேண்டும். பின் வடிகட்டிய அந்த தண்ணீரை அருந்த வேண்டும். இதே போன்று பத்து நாட்கள் தினமும் காலையில் அருந்த வேண்டும். நீங்கள் பத்து நாட்கள் செய்து வந்தால் கண்டிப்பாக உங்களுக்கு சர்க்கரையின் அளவு குறையும்.

பன்னீர் பூ கணையத்தில் உள்ள பீட்டா செல்களை குணப்படுத்தி, இன்சுலின் பயன்பாட்டை சரி செய்கிறது. இது பீட்டா செல்களை சரி செய்வது மட்டுமல்லாமல், இன்சுலின் சுரப்பதற்கும் உதவுகிறது. மேலும் டைப் 2 நீரிழிவானது இன்சுலின் சுரப்பதை தடுக்கிறது. இதற்கு தீர்வு காணும் வகையில் இந்த பன்னீர் பூவானது இயற்கை மருந்தாக செயல்படுகிறது. தினமும் இரவில் ஊற வைத்து காலையில் ஊறிய காயை வடிகட்டியில் வடித்து அந்நீரை வெறும் வயிற்றில் குடித்து வர இரத்தத்தில் சர்க்கரையின் அளவு படிப்படியாக குறைந்து விடும். நீங்கள் இதை சாப்பிட ஆரம்பித்ததும் மாதம் ஒரு முறை இரத்த பரிசோதனை செய்துக் கொள்ளலாம்.

Published by by S. CHINNAPPAN, on behalf of MUTRAM SOCIETY From Tamilnadu Corporation for Development of Women's Ltd.,
Printed by V. RAMESH, Chennai Micro Print Private Ltd., New No. 130 / Old No. 34, Nelson Manickam Road, Aminjikarai, Chennai – 600 029.
Published from (90,600 Copies circulated) Tamilnadu Corporation for Development of Women's Ltd., Annai Teresa Mahalir Valagam,
Valluvarkottam High Road, Nungambakkam, Chennai - 600 034. Editor : S. CHINNAPPAN

22-ம் ஆண்டில் வெற்றிநடை போடும்

முற்றம்

- சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகளை அறிந்திட முற்றம் படியுங்கள்!
- முற்றம் மேலும் மேலும் வளர்ந்திட உங்களின் ஆதரவை தாருங்கள்!
- முற்றத்திற்கு சந்தா செலுத்திடுங்கள்!!

முற்றம் இதழின் சந்தா விபரம்

ஒரு ஆண்டு	ரூ. 200
இரண்டு ஆண்டு	ரூ. 400
மூன்று ஆண்டு	ரூ. 600

விளம்பரக் கட்டணம்

அட்டையின் 2-வது பக்கம்	ரூ. 50,000
அட்டையின் 3-வது பக்கம்	ரூ. 50,000
அட்டையின் பின்பக்கம்	ரூ. 50,000
புத்தகத்தின் உள்பக்கம்	ரூ. 35,000

முற்றத்திற்கு செலுத்தும் சந்தாத் தொகையினை 'முற்றம்' (MUTRAM) என்ற பெயரில் சென்னையில் மாற்றத் தகுந்த வகையில் வங்கி வரைவோலையாக எடுத்து அனுப்பவும். வரைவோலையுடன் உங்கள் பெயர், குழுவின் பெயர், கதவு எண், தெருவின் பெயர், ஊராட்சியின் பெயர், தாலுக்கா, மாவட்டம் மற்றும் அஞ்சலக எண் ஆகியவற்றை அவசியம் குறிப்பிட்டு அனுப்பவும்.

வாசகர்கள் முற்றம் இதழ் குறித்த உங்களின் விமர்சனங்களை உங்கள் குழுவின் அஞ்சல் முகவரி மற்றும் புகைப்படத்துடன் முற்றம் இதழிற்கு அனுப்பலாம். சிறந்த விமர்சனங்கள் புகைப்படத்துடன் பிரசுரிக்கப்படும். பரிசும் வழங்கப்படும்.

விமர்சனங்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி:
மேலாளர், முற்றம் மாத இதழ், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
அன்னை தெரசா மகளிர் வளாகம், 3வது மாடி,
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை, நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.

RNI No. TNTAM/1999/02733-TAMILNADU MAKLIR MAMPATTU MURTRAM R.DIS. 344/2019
Reg.No. TN/CH/(C)/455/2018-2020 & Licensed to Post Under without Prepayment TN/PMG(CCR)/WPP-564 / 2018-2020
Date of Publication : 1st Week of the every month

“வாழ்வாதார இயக்கத்தின் வெற்றிக்கும், நகர்புற வளர்ச்சிக்கும் அனைவரும் ஒன்றிணைந்து செயல்படுவோம்”

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்
TAMIL NADU URBAN LIVELIHOODS MISSION
Empowering Lives

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் மூலம் நகர்ப்புற ஏழை எளிய மக்கள், தெருவோர வியாபாரிகள் மற்றும் நகர்ப்புற வீடற்றோருக்காக பல்வேறு திட்டங்களை தீட்டி தமிழக அரசு சீரிய முறையில் செயல்படுத்தி வருவது பெருமைக்குரியது.